தென்மொழி

தமிழைக் கொல்லும் மூடர்களே!

கலப்புத் தமிழும் தமிழாமோ?—இழி
கயமைச் செயலும் செயலாமோ?
அலப்புச் சொல்லும் இசையாமோ?—வீண்
ஆரவாரமும் வாழ்வாமோ?

கொச்சைத் தமிழும் தமிழாமோ?—கடுங்
கொடுமை உரையும் உரையாமோ?
பச்சைச் சொல்லில் பாலுணர்வைத்—தாள்
பதிக்கும் இதழும் இதழாமோ?

போலித் தமிழும் தமிழாமோ?—வெறும்
புன்மைப் பேச்சும் பேச்சாமோ?
கூலிப் பிழைப்பும் பிழைப்பாமோ?—ஒரு
கொள்கைச் சிதைவும் சிறப்பாமோ?

கீழ்மைப் பேச்சும் தமிழாமோ?—சிறு
கிறுக்குத் தனமும் அறிவாமோ?
தாழ்மைச் செயலால் பிழையுரையால்—செந்
தமிழைக் கொல்லும் மூடர்களே!

சுவடி 16
ஓலை: 5

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை
ஓர் உருபா.

நமக்கு வந்த மடல்கள்.

(பொறுப்பாசிரியர் அவர்களின் தந்தையார் மறைவு குறித்து வந்த ஆறுதல் மடல்கள் சிலவற்றின் சில பகுதிகள் இவ்விதழில் வெளியிடப் பெறுகின்றன.)

0:689: **15-12-79**-இல் நெல்லையில் கூடிய 'அனைத்திந்திய ஆசிரியர்கள் காந்தி சேவா சங்கம்' திருநெல்வேலி மாவட்டச் செயற்குழு, மாவட்டச் செயலாளர் திரு. **தே, அரசதேவநேயன்** (தே. இராசதேவமித்திரன்) அவர்களின் தலைமையில் கூடி, நிறைவேற்றிய கீழ்க்காணும் தீர்மானம், மாவட்டச் செயலாளர் முன்மொழியப் பெற்று. மாவட்டத் தலைவர், **பெரியார் ஆரோக்கியசாமி** அவர்களால் வழிமொழியப் பெற்றுக் கழகத்தின் அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. இத்தீர்மானத்தின் பின் செயற்குழு 5 மணித் துளிகள் வாயமைவு (மௌனம்) இருந்து, தன் இயல்பான பணிகளை ஆராய்ந்தது.

தீர்மானம் வருமாறு: தமிழினப் பாவலர்களில் பாடல் சான்ற பாவலரேறு அவர்களைத் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு ஈந்த தகைமிகு இரா. **துரைசாமி** அவர்கள் எதிர்பாராத வகையில் கடந்த திசம்பர் திங்கள் 5-ஆம் நாள் இயற்கை யெய்தியது கேட்டு, இக்கழகச் செயற்குழு பெரிதும் வருந்துகிறது. தூய நல்ல தமிழ்க் கொண்டலை, தனித்தமிழ்ப் பண்பாட்டின் தலைமைக் காவலனை மறைமலையடிகளாரின் இளவலை உலகுக் கீந்த சான்றோரை இழந்து வாடும் பாவலரேறு அவர்களுக்கும் அவர் குடும்பத்தார்க்கும் உறவினர்க்கும் தென்மொழி அன்பர்களுக்கும் இச்செயற்குழு தன் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

0:690: இத்துயரச் செய்தியினை அறிந்த நாங்கள் அனைவரும் ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கினோம். தங்கள் துயரத்தில் நாங்கள் எங்கள் குடும்பத்தினர் நண்பர்கள், மற்றுமுள அனைவரும் பங்கு கொள்வதுடன், கோபி திருக்குறள் பேரவையினரும் தங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றனர். அன்னாரின் ஆதன் (ஆன்மா) அமைதியடைந்திட இறையருள் துணைபுரிவதாக! —இங்ஙனம், **திருக்குறள் பேரவையினர்** கோபிசெட்டி பாளையம், (கையொப்பம்) தலைவர். **கே. எசு ஆனந்தப்,** வணி. இ; ச. இ. செயலர். **பாரிமணியம்**, க. இ துணைத் தலைவர். **செ. சு. பழனிசாமி,** பொருளர். மு. **நாகேசுவரன்**, அறி. இ. பேரவையினர்: **இராசமாணிக்கம், ஓ. கு. தியாகராசன், க. இரா. கந்தசாமி, அ. சரசுவதி அரங்கசாமி. செ. சகுந்தலா, ஆயிசா கணபதி** (ஆசிரியர். **பூங்கோதை**), **ஆ. இளமுருகன்** (செய்தியாளர் 'தினகரன்', 'மாலை முரசு') சு. கு. **முத்துசாமி**! க. இராமசாமி.

(அட்டைத் தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 16 ஓலை: 5.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
நளி. தி. பி. ௨௰௧௰-
திசம்-சன-1979-80.

தென்மொழி
இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர்: மா. பூங்குன்றன். அறி.இ; க.மு.

புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்,
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

தமிழுணர்வுள்ளார் தமிழைக் காக்க!

தமிழினம் இன்றைய நிலையில் பலவழியிலும் திசை திரும்பிப் போய்க் கொண்டுள்ளது. தனக்கென அமைந்த ஓர் அறவியல் சார்ந்த அரசியல் நெறி முதற்கொண்டு அதன் வாழ்வியல், பண்பியல், குமுகவியல், மொழியியல் ஆகிய அனைத்திலும் அது தன் மரபு நிலைகளையும் நாகரிகச் சீர்மைகளையும் கட்டவிழ்த்துக் கொண்டு தடம்புரண்டு தடுமாறிக் கொண்டுள்ளது. தனக்கென தன் முன்னோர் அமைத்துக் கொடுத்த அனைத்துச் செந்நெறிகளையும் அது கைநெகிழ்த்துக் கொண்டுள்ளது. இந்நிலை இவ்வினத்தை எங்கே கொண்டு செல்லுமோ தெரியவில்லை. இன்னும் ஓர் ஐம்பது, நூறுண்டுகளுக்குள் தமிழியல் சார்ந்த ஒரு பழம் பெரும் இனமே

இல்லாது போய்விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. காலங் காலமாய் இவ்வின மக்கள் உலகியலிலும் உளவியலிலும் அறிவியலிலும் ஆழ்ந்து தோய்ந்து படிநிலையுற்று அதன் பட்டறிவால் வாழ்வியல் கூறுகளும் மனவியல் தோற்றங்களும் மக்களியல் தெளிவுகளும் எங்கு ஒன்றுக்கும் உதவாமல் போய்விடுமோ என்று மிகவும் வருந்த வேண்டியுள்ளது. மக்கள் வாழ்க்கையின் அடித்தளத்தில் பூத்து மலர்ந்து மணம் பரப்பிய மனமலரின் மெய்யுணர்வுத் தேன், எங்குப் பொருளற்ற ஒரு வெற்றுணர்வாக வெறுந்தரையில் சிந்தப்பட்டு விடுமோ என்று நெஞ்சம் நெகிழ வேண்டியுள்ளது. இவ்வத்தனைக்கும் மேலாக, ஊழி ஊழியாய் மெய்ம்மையும் உள்ளுணர்வும் சான்ற தெய்வப் புலமைச் செந்நெறிச் சான்றோர் தம் உள்ளத்தால் பொதிந்து அறிவுணர்வால் காத்து வளர்த்து வளமாக்கிய முதன்மைத் தமிழ்மொழி, எங்கு அக்கு வேருக ஆணி வேருகச் சிதைக்கப் பெற்று, உருமாறித் திக்குத் திசை தெரியாமல் திரிந்து போகுமோ என்று உயிர் நடுங்க வேண்டியுள்ளது.

காலம் என்னும் கடும் புயற்காற்றையும், அது கைதொட்டுச் சிதைக்கும் பல்வேறு இயற்கைக் கோலங்களையும், அவற்றுள் சிக்கிச் சிதறுண்டு அழுந்திப் போகும் வழிவழி மெய்ம்மங்களையும் ஒருவாறு நாம் அறிவோம். எனவே, எதன் பொருட்டாயும் நாம் உள்நடுங்கத் தேவையில்லை என்னும் இயல்பியல் மெய்ம்மக் கோட்பாடும் நமக்குத் தெரியும். இருப்பினும், கண்ணில் ஊமன் கையுள் கிடைத்த எண்ணில் மாட்சி இறும்பூதாம் நம் இயற்கைத் தமிழ், தேடறக் கிடைத்த நம் தெய்வத் தமிழ், மக்கள் வாழ்வியல் கூறுகளையே தன் வளங்கொழிக்கும் சொற்களாகக் கொண்டு, புலம்பெருக்கும் நம் பொய்யாத் தமிழ், உலகியலில் சென்றுழலும் மாய்மாந்தக் கசண்டகற்றிப் பொய்மாந்தப் பூண்டறுத்து, ஒளிச்சுடரேற்றி உளம் பெருக்கும் நலங்கிளர் மருந்தாம் நம் நறுந்தமிழ், தனக்கென அளாவிக் கொண்ட தன் தனிப்பெருங் கூட்டத்தினரால் இனங் கண்டு கொள்ளப் பெறுமல் இயல்பழியக் கிடக்கின்றதே என்று மனங்குமுறும் ஏக்கப் பெருமூச்சு வரத்தான் செய்கிறது. அப்பெருமூச்சே காட்டுத்தீ போன்ற உள்ளுணர்வை நம்முள் கனல்விக்கின்றது. அக்கனற்கொழுந்தே மனநாக்குகளை இம்மக்கள் முன் பேசவைத்து, இன நோக்குகளை அவர்களுக்கு விளங்க வைக்க உதவுகிறது. எனவே, 'எம்மருந் தமிழ் மக்காள் இன்னறுஞ் செயல்கள் செய்ய இன்றே வாருங்கள்; இன்னே வாருங்கள்' என்று அறைகூவி அழைக்கின்றது நம் நெஞ்சம்!

புன்மையும் போலிமையும் கண்மயங்கக் காட்சிதரும் இக்கால, இட நெரிசலுள், இன்மையும் இழிவும் நாடி எந்தமிழ் மக்கள் நெடுந் தொலைவு கால்கடுக்க மனங்கடுக்க நடந்து வந்து விட்டனர். தம் செழுமை மிகும் வளவாழ்க்கையின் அறவேலியைத் தாண்டி இத்

தமிழ் ஆட்டுக்குட்டிகள், கொடுமை மிகும் மற வாழ்க்கைக் கொடும் புதர்க் காட்டுள் ஓட்டிவரப் பெற்றுவிட்டன. இவற்றிற்கு இன்று இனந் தெரியவில்லை; மொழி தெரியவில்லை; வழி தெரியவில்லை. உலகிற்கே புலனறிவு புகட்டிப் பண்புப்பாடம் கற்பித்து நாகரிகம் நாட்டிய இவ்வினம், இன்று அனைத்துத் துறைகளிலும் நெறி களிலும், தன் அறிவு நாக்கு வரண்டு, ஒளிவிழி ஒல்கி உணர்வுக் கூர்மை மழுங்கி, தள்ளாடும் கால்களுடனும் மல்லாடும் வயிற்றுக் காந்தலுடனும், வாய்க்கால் வழி ஓடிவரும் சாய்க்கடை நீருக்குச் சப்புக் கொட்டும் நாய்க்கடை வாழ்க்கை வாழும் வல்லடிமையாகிக் கிடக்கின்றது. அந்தோ, இதன் இழிவுதான் என்ன! இதன் விடிவுதான் எப்பொழுது?

ஊதற் காற்றுள் உடல் குறுகிக் கூனிக் கிடக்கும் ஓர் ஏழை போல் இன்று அயல் நிலத் தமிழர்கள் வாட, மோதற் கொள்கை அரசியலுள் இன்று முங்கிக் கிடந்து சாகின்றான் இத் தாய்நிலத் தமிழன். இவன் காலுள் மிதிபட்டுக் கிடக்கிறாள் எம் செந்தமிழன்னை. ஐயகோ, இத்தமிழன்னையை வாழ்விக்க எத்தனை முனிவோர் தவமிருந்து வாடினர்; எத்தனைப் புலவோர் பொறிகிளர்ந்து போற்றினர்; எத்தனை அரசர்கள் புலம் வென்று புரந்தனர். இன்று இவள் நிலை என்ன? கொச்சைத் தமிழும் கொடுந்தமிழுமாய் மொச்சை நாற்றம் வீசும் இவளின் நறிய மேனியைக் கழுவுவார் எவர்? கலப்புத் தமிழும் அலப்பு மொழியுமாய் இழப்புற்ற இவளின் செல்வத் தமிழைச் சீர்செய்வார் எவர்? தெருவெல்லாம் தமிழ் மணந்த இச் செந்தமிழ் ஊர்களைச் செப்பஞ் செய்வார் எவர்? ஏனிந்த தடுமாற்றம்! எப்படி நேர்ந்தது இவ்வேமாற்றம்?

வாடிய வரலாற்றுப் பயிரை நன்னீருற்றி வளஞ்செய்வார் இனி, நந்தமிழினத்தில் தோன்றுவரா? கோடிய வாழ்வு நிலைகளை இனிக் கோடாது தூக்கி நிறுத்த வலிமறவர் கூட்டம் ஒன்று நந்தமிழகத்தில் வந்து தோன்றுமா? திரைப்படத் தொழு நோயும், பாலியற் கொடும் பிணியும், அரை அம்மணக் கூறுகளும் இறுகப் பற்றி அலைக்கழிக்கப்படும் இவ்வேதுங் கெட்ட இழிதமிழ் மக்களைத் தடுத்து நிறுத்தி வடிவு செய்யும் ஆற்றலுற்றவர் தோற்றுவரா, இனி? தெருத்தொறும் ஊர்தொறும் நாற்றமடிக்கும் கழிகாமக் கயமைக் கூற்றுவர்களைச் சீற்றமுடன் ஓட்டி விரட்டி ஏற்றங் கொளுவும் முயற்சிகளில் தம்மை இழந்து கொள்ளும் போற்றுதற் குரிய கான்முளைகள் இனி, நாற்றுக் கொளுவுமா? ஏக்கப் பெரு மூச்சால் உயர்ந்து தாழ்கிறது நல்லவர் நெஞ்சம்.

'தமிழல்லால் தமிழரில்லை' என்று நாம் ஒவ்வொருவரும் உணரும் நாள் எப்போது? தமிழே நமக்கு வித்தாகத் தமிழினமே நமக்குச் சொத்தாக, நாம் நமக்குற்றநம் தமிழ் நிலத்தை ஆளுமை

செய்வது எப்போது? எத்தனை இளைஞர்கள் இன்று இவ்வுண்மை நிலைகளை உணர்ந்திருக்கின்றனர்? நாற்றமடிக்கும் அரசியல் சகதியுள் தம்மை நலிவு செய்து கொண்டுள்ள—நமக்கென வாய்த்த-கொள்ளைப் பெருந் தலைவர்களின் கையடிக்கும் வாயடிக்கும் தம்மை ஆளாக்கிக் கொண்டு அறிவிழக்கும் தமிழரிடை, உண்மைத் தமிழ் ஆற்றலையும், உலகத் தமிழர் வாழ்வுகளையும் ஈடேற்றும் பெரு முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் உள்ளுரன் மிக்க—உளவூக்கம் குன்றாத—உண்மைத் தமிழ் நெஞ்சங்களை நாம் ஒன்றிணைக்க வேண்டும். அவர்தம் உடல்நரம்புகளில் செந்தமிழ்க் குருதியைப் பாய்ச்சுதல் வேண்டும். மரத்துப் போய்க் கிடக்கும் அவர்தம் நல்லுணர்வுகளில் தூய்தமிழ்க் கனப்பை மூட்டுதல் வேண்டும். தொய்த்து கிடக்கும் அவர்தம் நெஞ்சங்களின் காற்றுப் பைகளில், பண்டைப் பசுந்தமிழின் நறுங்காற்றை ஓடவிட வேண்டும். மொத்தத்தில் அவர்தம் காட்சிகளை மாற்றல் வேண்டும்; கருத்துகளைப் புதுக்கல் வேண்டும். அவ்விடத்துச் செந்தமிழின் மாட்சிகளை வேரூன்றச் செய்தல் வேண்டும். போலி நாகரிகத்தாலும் புன்மைச் செயல்களாலும் அழுந்திக் கிடக்கும் அவர்தம் தோள்களை விடுவித்தல் வேண்டும். துளியும் சோர்ந்து போகாமல் ஒருபெரும் வலிந்த முயற்சியில் இவ்வெற்றிகளைக் குவித்தல் வேண்டும்.

தமிழே இவ்வெற்றிக் களத்தின் வெல்கருவி. தமிழே இவ்வரு முயற்சியின் வழித்துணை. தமிழே இவ் வருமைப்பாட்டின் வழிநடைப் பண். மற்றபடி, அரசியலென்றும் பொருளியல் என்றும், சாதி என்றும் சமயம் என்றும் கூக்குரலிடும் வலிமையற்ற ஓலங்களால் வந்து வாய்க்கப் போவது ஒன்றுமில்லை. தமிழை விடுத்துத் தமிழர்களை ஒன்றிணைக்க முடியாது; தமிழை மறந்து தமிழ் நாட்டை வளமுறச் செய்தல் இயலாது. தமிழைத் தாழ்த்தித் தமிழ்ப் பண்பாட்டைச் சமைத்தல் ஒல்லாது; தமிழைத் தவிர்த்துத் தமிழினத்திற்கு நலந் தேடி விடல் நடவாது! பல்வேறு முயற்சிகளும் பல்வேறு வகையான விடிவுக்குப் பயன்படலாம். ஆனால், தமிழியல் மரபுகளே தமிழினத்தைக் கட்டிக் காக்க வல்லன. இவ்வுலகின்கண் வெளிப்பாடுற்ற ஒவ்வோர் உயிரினத்தின் முழு மலர்ச்சியும், அதனதன் உள்ளுயிர்க் கூறுகளை மலர்த்திக் கொள்வதில்தான் நிலைப்பாடுற்றுச் சிறந் தியங்கக் கூடும். உள்ளுயிர்க் கூறுகள் சிதைக்கப்பெறும் எந்த ஓர் உயிரினமும் இந் நீணிலத்தில் நெடுங்காலம் நின்று வாழ்ந்ததில்லை. இஃது ஓர் உயிரின வரலாற்றுண்மை. இவ்வடிப்படை உண்மை எத்தனை அறிவியல், வாழ்வியல் வளர்ச்சி மாற்றங்களாலும் சிதைக்கப் பெறல் முடியாது. சிதைக்கச் சிதைக்கச் செழித்து வளரும் தகையது இது.

எனவே, பகுத்தறிவென்றும், புதுமைப் புரட்சி யென்றும் அறிவியல் தாக்கம் என்றும்—புதுப்புதுப் போலித் தருக்கங்களால்

உள்ளது சிதைக்கும் இயற்கைக்கு மாறான புல்லிய முயற்சிகளில் இளைஞர்கள் சிக்கிச் சீரழிதல் வேண்டா. ஓர் ஆலமரம் வளர வளரத் தனக்கடிப்படையான ஆலம் வித்தின் தன்மைகளை இழந்து விடுவதில்லை; கருமபுக் கழனிக்குள் வைத்து வளர்க்கப் பெற்றாலும் கள்ளிப்பாலின் தன்மை மாறுவதில்லை. காக்கைக் கூண்டுக்குள் வாழ்க்கை நடத்தும் குயில் எப்பொழுதும் தன் இயற்கைக் குரலை மாற்றி ஒலிப்பதில்லை. அவ்வாறு மாற்றி ஒலிக்குமாயினும் அது தன்னைக் குயில் என்று கூவிக்கொள்ளல் இயலாது. மாந்த இனம் உலகெங்கும் ஒன்றேயாகலாம். ஆனால் அவ்வினத்தின் பல்வேறு இயற்கைக் கூறுகள், அவ்வவ் விடங்களுக்கேற்பவும் வெப்பதட்பங்களுக்கு ஒப்பவும், அவ்வவ் வினை உணவு விளைவுகளின் அடிப்படையிலும், அவ்வவ் வினை மக்களைத் தனித்தனி ஒலித்திறன்களைக் கொண்டவர்களாகவும், தனித்தனி உள்ளுணர்வுகளைக் கொண்டவர்களாகவும் தனித்தனி நடைமுறைகளைச் சார்ந்தவர்களாகவும் சிறப்புறச் செய்கின்றன இவ்வியற்கை உருவாக்கத்தைச் சிதைத்தல் இயலாது, இதன் சிறப்பியல்களைக் குலைத்தலும் முடியாது. அவ்வாறு தன் இயல்புகளைச் சிதைத்துக் கொள்ளும் ஓரினம் தன் தனித்தன்மையை அதைப் பொறுத்த அளவில் இழந்துவிட்டாலும், கால அடைவில் அது வேறோர் இனத்தின் தனித்தன்மைக்குத் தன்னை அடிப்படுத்திக் கொள்ளவே நேரும். குரங்கு ஒரு கிளையை விட்டால் மறு கிளையைப் பற்றியே ஆகல் வேண்டும். ஒரு கிளையிலேயே வாழ விரும்பாமல் அயற் கிளைகளுக்குத் தாவும் குரங்குகள் இருக்கலாம். ஆனால், அவை பொருட்டால், அக்கிளையில் மிகுந்துள்ள மற்ற அத்தனைக் குரங்குகளின் சிறப்பு நிலைகளையும் அழித்துக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று எந்தக் குரங்கும் வாய்வாள முடியாது. உணர்வு மாறிகளுக்கு எப்படித் தாம் வாழும் உரிமை உண்டோ, அப்படியே தன்னுணர்வு மிக்கவர்கள் தாமும் வாழ உரிமை உண்டு. எனவே, கிளை மாறும் குரங்கினங்கள்போல் தம்மைச் சிறப்பழித்துக் கொண்டு உளந்திரிந்த உணர்வு மாறிகள் போக, எஞ்சியுள்ள உண்மைத் தமிழ் உணர்வுள்ளங்கள் இனியேனும் எஞ்சியுள்ள தம் தமிழியல் மரபுகளைக் கட்டிக் காக்கும் முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும். அதற்கு அடிப்படையாக நம் உள்ளுணர்வாம் மூலத் தமிழ் மூவா மொழியை வலிந்து பற்றிக் கொண்டு அதனை மேன்மேலும் வளரச் செய்தல் வேண்டும்; வாழச் செய்தல் வேண்டும். அந்த நல்ல நாள் நமக்கு மிகவும் நெருங்குவதாகுக!



'நமக்கு வந்த மடல்கள்' பகுதியின் தொடர்ச்சி

0:726: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். தங்கள் தந்தையார் இயற்கையெய்திய செய்தியைத் தென்மொழிவாயிலாக அறிந்து பெருந்துயரடைந்தேன். தந்தையாரைப் பிரிந்து வாடும் தங்கட்கும் தங்கள் இல்லத்தார்க்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—**அ. இளங்கோவன்**, திருவெறும்பூர்.

0:727: அன்புள்ள ஐயா, செய்தி அறிந்து வருந்துகிறேன். பிரிந்த தந்தை இறைவன் இணையடி நிழலில் அமைதியுற அவரருள் நாடி, அணிபணிந்தேற்றி அமையும்.

த. முத்துக்குமரன், க. இ. மதுரை-1.

0:728: ஐயா அவர்களுக்கு, தங்களின் அன்புத் தந்தையார் மறைவு அறிந்து மிக்க வருத்தமுற்றோம். தகுந்த துணையாக இருந்த அவர்களின் மறைவு பெரிய இழப்பாகும்.

—**குமு. இளங்கோ**, இளங்கோ பொத்தக நிலையம், திருச்சி-2

0729:: பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். அவ்வப்போது தென்மொழி இதழ் எனக்கு வந்தவுடன் அட்டைமுகப்புப் பாடலையும், ஆசிரியவுரையையும், "நமக்கு வந்த மடல்" பகுதியையும் மட்டும் படித்து விட்டுத் தென்மொழி இதழ்ச் செய்திகளைப் பரப்பும் நோக்கோடு, நண்பர்களிடையே இதழைப் பரவ விட்டுச் சின்னாட்களுக்குப் பின்னரே—முழுமையாக இதழைப் படிப்பது என் இயல்பு. இவ் வண்ணமே, இவ்விதழையும் சுற்றுக்கு விட்டுப் பின் நான்கு நாட்களுக்கு முன்னர்தான் முழுமையாகப் படித்தேன். 4-ஆம் பக்கத்தில் அருமைத் தந்தையின் மறைவுச் செய்தி யறிந்து, வருந்தினேன்.

தனித் தமிழ் அறிஞரும் - எண்ணற்ற—இன்றைய இளந் தலைமுறையினருக்கு மொழி—இனம்—நாடு எனும் முந்நிலையிலும் பற்றுக்கொள்ளுமாறு எழுச்சிமிக்க உணர்ச்சிப்பாக்களை வடித்துத் தரும் செந்தமிழ்ப் பாவலரும், பொருண்முதல்—கருத்துமுதல் எனக் குழப்பித் தருக்கித் தெளிவற்ற நிலையில் குழம்பி நிற்கும் பல்லாயிரவர்க்குத் தெளிந்த நீரோடையன்ன மெய்ம்மையியல் கருத்துகளை வழங்கி நிறைவு செய்யும் ஆற்றல்மிகு—ஏற்றம் பெற்றச் செந்தமிழ் மறவரும்—மெய்ப்பொருளியல் பேரறிஞரும் ஆகிய தங்களை, இத் தமிழ் கூறுநல்லுலகத்திற்கு ஈன்றளித்த—தங்களின் இனிய தந்தையாகிய அப்பெருந்தகையின் ஆதன் அமைதி பெற இறைஞ்சி, அன்னாரின் பிரிவால் வருந்தும் தங்கட்கும், தங்கள் குடும்பத்தார்க்கும், ஏனைக்கிளைஞர்க்கும்—கேண்மையர்க்கும்—மற்றைத் தமிழ்ச் சுற்றத்தார்க்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பன்,

—**கதிர். தமிழ்வாணன்**, குடந்தை.

(4-ஆம் அட்டைப்பக்கத் தொடர்ச்சி)

கின்றது. என்னுடைய ஆழ்ந்த பாசம் நிறைந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

— கு. இராசேந்திரன், க. மு. அண்ணுமலைநகர்.

0:698: ஊர், உலகம் அனைத்திற்கும் அறிவு ஒளியும் அன்பு ஒளியும் பரப்புவதற்காகவே தங்கள் வாழ்நாளையே ஒப்படைத்து, மற்றவர்கள் துன்பத்தை உங்கள் துன்பம் போல் எண்ணும் உங்களுக்குமா இவ்வளவு விரைவில் இந்த ஆய்வுநிலை என்று எண்ணி வருந்துகிறேன். 'கனிச்சாறு' வெளியீட்டு விழாவில் அறிஞர் பெருமக்கள் பலரும் தங்களைப் பற்றியும், தங்கள் பாடல் களைப் பற்றியும் புகழ்ந்து கூறும் பொழுது தங்கள் அப்பாவின் அகமும் முகமும் மகிழ்வதைக் கண்ணுரக் கண்ட நிலையில் இன்னும் எதிர்காலத்தில் இவ்வாறான மகிழ்வை நிறைய அடைய விடாமல் இறைவன் தன்னகத்து அவரை அழைத்துக் கொண்டது மிகமிக வருந்தத்தக்கது.

—நரரா. மகிழ்நன், திருச்சி-14.

0:699: செய்தியறிந்தேன். மிகவும் துணுக்குற்றேன். இச் செய்தி என்னல் நம்ப முடியாததாகவும் உள்ளது. ஏனெனில் சின்னுட்களுக்கு முன்தான் அவரைப் பார்த்தேன்; அவரிடம் பேசினேன்; அகமகிழ்ந்து உரையாடினேன். அவரின் அப்போதைய தோற்றம் இன்னும் எமக்குப் பசுமையாகவே உள்ளது. என் இல்லத் தாரிடம் அவரைப் பற்றிக் கூறும் போதெல்லாம் 'ஐயாவின் தந்தையார் அவருக்குத் தந்தை போன்றே தோற்றந் தரவில்லை. சற்று மூத்த அண்ணன் போல் இருக்கிறார்' என்று கூறி மகிழ்ந் தேன். ஏனெனில் அவரின் தோற்றம், நடை, உடல்வாகு எல்லாம் அவருக்கு இந்நிலை ஏற்படும் என்று யாராலும் கருத முடியாத அளவு இருந்தன. அப்போதும் கூட, தாம் உணவு நிலையில் கட்டுப் பாடாக இருப்பதாகவும் எங்களிடம் கூறினர். அவர் இங்கு உண்ணுகின்றபோது, எவ்வகை உணவுப் பொருளை மிகுதியாக வைத்தாலும் தடுத்து விடுவார்...தங்களுக்கு ஆறுதல் கூறும் அளவுக்கு எமக்கு அகவை இல்லாவிட்டாலும், தாங்களும் தென் மொழிக் குடும்பமும் இத்துன்ப நிலையினின்று அமைதி பெற வேண்டுகின்றேன்.

—தாமரைக்கோ, புதுவை-10.

0:700: மாணிக்கத்தை ஈன்றுவிட்டு மன்னர் மறைந்தார். போளூர் நகரின் சார்பாக ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மு. செகந்நாதன், க. இ. போளூர், வ ஆ.

0 701: 'கனிச்சாறு' வெளியீட்டு விழாவில் அவர்களைக் காணும் பேறு பெற்றேன். அதற்குள் அவர்களின் மறைவைக் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. தென்மொழிப் பணியில் நம்மை மேலும் ஈடுபடுத்தி வருத்தத்தை மறக்க முயல்வோம்.

—அ. ச. சுப்பு, பொறி. இ. தூத்துக்குடி.

0:702: கடந்த சில திங்கள்களாகவே நெருங்கிய நண்பர் கட்குத் துன்பங்கள் வந்த வண்ணம் உள்ளன.. தந்தையாரை மதுரை விடுதலை மாநாட்டின்போது கண்டு பேசியதை எண்ணிப் பார்க்கிறேன். அவருடைய இன்னுயிர் எல்லாம் வல்ல திருத்தணி முருகவேளின் திருவடிக்கீழ் இன்புற்றிருக்க அவன் திருவடிகளை வழுத்துகிறேன்.

—புலவர் **கா. இளமுருகன்**, க. மு. புன்செய்ப்புளியம்பட்டி.

0:703: தந்தையார் மறைவுச் செய்தி கண்டு திடுக்கிட்டேன். அவர் 'கனிச்சாறு' வெளியீட்டு விழாவில் நலமாகவும் அழகாகவும் அமர்ந்த கோலம் என் கண் முன்னே இன்னுந் தெரிகிறது பெற்றோரின் நலத்தினை அன்று பிற்பகல் பெருமிதத்துடன் தாங்கள் கூறியபோது பெருமைப்பட்ட நான் அதை நினைத்து இன்று கலங்குகிறேன். —**க. தமிழமல்லன்**, புதுவை-9.

0:704: 'கனிச்சாறு' வெளியீட்டு விழாவுக்கு வந்து சென்றமையான் தங்களைப் பற்றிய பாராட்டுதல்களையும் உயர்வையும் மற்ற பெரியோர் வழிக் கேட்டு மிக்க மகிழ்ந்திருப்பார்கள். நிறைவுடனேயே சேலம் சென்றிருக்கக்கூடும்...அன்னாரின் ஆதன் அமைதியுற இறையருள் இறைஞ்சுகிறோம்.

—**சுப. திருமாறன்** மற்றும் **குடும்பத்தினர்**, நெய்வேலி-1.

0:705: நம்பவே முடியவில்லை...நான் கடந்த திங்கள் என் மகன் கொன்றைவேந்தனை அவரிடம் காட்டி அவருடைய வாழ்த்தைப் பெற்றபோது இனி அந்த இனிய முகத்தைப் பார்க்கவே மாட்டோம் என்று எண்ணவேயில்லை. என்னால் ஆற்றிக்கொள்ளவே முடியவில்லை. —**செ சித்தார்த்தன்**, சென்னை-15.

0:706: அவர் விழாவில் அமர்ந்து மனம் நெகிழ நிகழ்ச்சியில் கலந்து கொண்டதே என் மனத்தில் இன்றும் இருந்து கொண்டே உள்ளது.

—**ப. துரையரசன், துரை. இறைவி** கைகாட்டிப்புதூர்

0:707: எனது ஆழ்ந்த இரங்கற் செய்தியைத் தெரிவிக்கிறேன்.

—பதின்திறலார். திருக்குறள் **பெ. இராமையா**, கோவில்பட்டி.

0:708: ஆழ்ந்த இரங்கல்கள். —**வில்வன்**, கூவலூர்.

0:709: விழாவில் தங்களை ஈன்ற முதுபெரியோரைக் காணும் பேறு பெற்றேன்...தங்களுடன் சேர்ந்து துயர்ப்படுவதில் எமக்கோர் ஆறுதல். —**மா. செ தமிழ்மணி**, வேட்டாங்குளம்,

0:710: தங்கள் துன்பத்தில் நானும் பங்கு கொள்கிறேன்

– புலவர் **பொன். முகிலன்**, கூவலூர்.

0:711: தங்கட்கும் இல்லத்தார்க்கும் ஆழ்ந்த இரங்கல்!

—புலவர் **மு. ஆறுமுகம்**, சாத்தனூர்.

0:712: தங்களின் துயரத்தில் பங்கேற்கிறேன். அமைதி பெறுக. —**தமிழவேள்,** பழங்கரை.

0:713: ஆழ்ந்த இரங்கல். — **மா. அரசு,** கோபிப்பாளையம்.

0:714: தங்களது இவ்வாற்றவொண்ணுத் துயரில் யானும் பங்கு கொண்டு ஆறுதல் கூறுகின்றேன்.

....**தமிழ்மகன்**, கோவை-2.

0:715: பிரிவுத் துயரால் வாடும் அனைவர்க்கும் திருப்பூர் தென்மொழி நண்பர்கள் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தினைத் தெரியப் படுத்திக் கொள்கிறேன் —**க. தமிழப்பன்**, திருப்பூர்-2.

0:716: ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம்.

—**சி. இறைவாணன்**. பட்டுக்கோட்டை.

0:717: தங்களுக்கு ஆறுதல் கூறுமளவுக்கு யான் தகுதி பெற்றிலேன். உள்ளார்ந்த வருத்தத்தைத் தங்களுடனும் இல்லத் தாருடனும் பகிர்ந்து கொள்கிறேன். —**சி. கைலாசம்,** ஈரோடு-10.

0:718: என் சார்பாகவும் தென்மொழி இயவத்தின் சார்பாக வும் ஆழ்ந்த இரங்கலைக் கூறுவதோடு அன்னைத் தமிழை எண்ணித் தேறுதல் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

—**அரங்க-தமிழ்மணி**, கோவை-15,

0:719: தங்களது துயரத்தில் என்னையும் இணைத்துக் கொள் கிறேன். —**சேலம் பாவரசு,** இளம்பிள்ளை,

0:720: இந்தக் கேடுகெட்ட உலகில் இருந்து இன்னும் அழுந் தாமல், தொல்லைப்படாமல் போனதற்காக நாம் மகிழ்ச்சியடைய வேண்டும் —**ஒரு பெண்ணுள்ளம்,** கோவை.

0:721: நெல்லை மாவட்டம், ஏரல் கொற்கைத் தமிழ்க் கழகம் கடந்த 20-12-79-இல், புலவர் **ச. சிவசங்கு** அவர்கள் தலைமையில் கூடி நிறைவேற்றிய இரங்கல் தீர்மானம் வருமாறு :

"தென்மொழி பொறுப்பாசிரியர் பாவலரேறு திருமிகு பெருஞ் சித்திரனுர் அவர்களின் அருமைத் தந்தையார் திரு. இரா. துரை சாமி அவர்கள் 5-12-79 அன்று இயற்கை எய்தினுர்கள் என்னும் துயரச் செய்தியைக் கேட்டுப் பெரிதும் வருந்துகின்றோம். தூய நல்ல அன்புள்ளத்தை இழந்து வாடும் தங்களுக்கும் உறவினர்களுக் கும் கொற்கைத் தமிழ்க் கழகம் தன் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத் தையும் தெரிவித்துக் கொள்கிறது" எனச் செயலர் புலவர் திரு, **க ஐயாத்துரை**, க. மு. அவர்கள் தெரிவிக்கிறுர்.

0:722: தந்தையார் அவர்கள் எதிர்பாராத வகையில் இயற்கை எய்திய செய்தி கேட்டு மிகுந்த துயருற்றுத் தமிழ்க்கலை மன்றத்தின் சார்பில் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள் கிறேன். —**பால் சாமுவேல்,** தமிழ்க்கலை மன்றம், தாராபுரம்.

0:723: உள்ளம் வருந்துகிறேன், எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

—இல. **வேலரங்கன்**, நஞ்சைசயம்பாளையம்.

0:724: அன்புள்ள ஐயா, வணக்கம். தென்மொழி கிடைத்தது. தங்கள் அருமைத் தந்தையார் திடுமென இறந்த செய்தி கண்டு, அதிர்ச்சி அடைந்தோம். முன்பே, 'தென்மொழி இயக்கத்திற்கென குடும்ப உறவைக்கூட விட்டுவிட வேண்டும் போலுள்ளது' என்று ஒருமுறை நீங்கள் கூறியது நினைவுக்கு வந்தது. நெருக்கடி நிலைக்குப் பின் தாங்கள இங்கு வந்தபோது; 'தம்பி! இவ்விரண்டு மூன்றாண்டுக்கால இடைவெளியில் அம்மா அப்பாவைக் கூட காண நேரம் வாய்க்கவில்லை. இம்முறை கட்டாயம் ஊர் சென்று திரும்ப வேண்டும்' என்றும் கூறினீர்கள். இவையெல்லாம் இன்று நினைவுக்கு வருகின்றன, தந்தையார் இறந்த நாள் 5-12-79. தென்மொழி எமக்கு 13-12-79-இல் அஞ்சல் செய்யப்பட்டிருந்தது. எம்மால் நம்ப இயலவில்லை. ஒரு கிழமையில் அனைத்துச் சோர்வினையும், வருத்தத்தையும் துடைத்தெறிந்து விட்டுப் பணிமேற்கொள்கிறீர்கள். ஆனால், துயரச் செய்தி கண்டு இரண்டு கிழமை கழித்து நாம் மடல் விடுப்பது எமக்கே வெட்கமாக உள்ளது. பெரியாருக்குப் பின் இவ்வகையில் தங்கள் ஒருவரையே பார்க்க முடிகிறது. அன்பு,

—பூவை மேட்டார் சார்பில் **துரை. மடங்கன்**, பா. நா. பாளையம்,

0:725: பேரன்புடையீர், தென்மொழி வாயிலாகத் தங்களின் தந்தையின் மறைவை அறிந்து வருந்துகிறேன். தந்தையை இழந்த தங்கட்கும் தங்கள் குடும்பத்திற்கும எனது ஆழ்ந்த இரங்கலை அறிவித்துக் கொள்கிறேன்.

—**கொ. செ. சின்னப்பனூர்**, கொம்பக்கோவில்.

விற்பனைக்குக் கிடைக்கும்

வழக்கம் போல் நெய்வேலி உ. த. க. வெளியிடும்

திருவள்ளுவர் நாள்காட்டி

ஒன்றின் விலை 1—75

கிடைக்குமிடம் :

இரா. இலக்குமணன், செயலர். உ. த. க. நெய்வேலி

14. கே. 408 குடியிருப்பு, நகர்க்கூறு-19.

நெய்வேலி-607803.



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு: ௫௰

யாவர்ப் பாடுகங் கொல்லோ கழகம்
மூமுறை நிறீஇ முத்தமிழ்ப் புரந்தோர்
அன்றே மாய்ந்தனர் அரசும் பொடிந்த
வென்றியுந் தோற்பு மின்றே யிரப்பார்க்
கொன்று தரலிலர் தரினுமுள் உவந்து
நன்றி நினைவிலர் கற்றல் நனியிலர்
உள்ளஞ் செவ்விலர் ஊருயும் பாடிலர்
கள்ளத்து முதலாக் களவூ தியத்துப்
பொய்ம்மை வாணிகப் போலி வாழ்வினர்
மெய்யறு சமயத்துச் சாதி மீட்பிலா
வெய்ய புன்குழாம் வீழ்ந்து
செய்யுட் கருவினர் தோன்றுநாள் வரையே!

பொழிப்புரை: யாவரைப் பாடுவம் கொல்; தமிழ்க் கழகத்தை முதல், இடை, கடை என மூன்று முறை நிறுவி, முத்தமிழையும் புரந்த செந்தமிழ்ச் சான்றோர்கள் அன்றையே மாய்ந்து போயினர்; அக்கழகங்களைப் பேணிய தமிழரசுகளும் காலத்தாக்குதலில் பொடிந்து போயின. இனி, வெற்றியும் தோல்வியும் இல்லை; இற்றையோ இரப்பவர்க்கு ஒன்று தருபவரும் இலர்; தரினும் உள்ளம் மகிழ்ந்து நன்றி நினைப்பவரும் இலர்; கல்வியைச் செப்பமுறக் கற்பவரும் ஈண்டிலர். உள்ளத்தால் சிறந்தவர்களும் இலர். ஊர் மக்கள் உய்ய வேண்டும் என்றெண்ணி அவர் பொருட்டாய் உழைப்பவரும் இலர். கள்ளத்தையே முதலாகக் கொண்டு, களவையே ஊதியமாகப் பெறும் நோக்கில், பொய்ம்மை வாணிகஞ் செய்யும் போலி வாழ்க்கையினரே இங்குளர். மெய்ம்மை அற்ற சமயங்களையும் சாதி வேறுபாடுகளினின்று மீளாத தன்மையினையும் கொண்ட, கொடிய புல்லிய மக்கள் கூட்டம் வீழ்ந்தழிந்து, செய்யுள் தோன்றுதற்குக் கருவாக நிற்பவர்கள் தோன்றுகின்ற நாள் வரைக்கும்.

விரிப்பு: இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

செய்யுள் தோன்றுவதற்கு உள்ளத்தில் நல்ல கரு ஒன்று உருவாகல் வேண்டும். இனி, ஒருவரைப் புகழ்ந்து பாடும் செய்யு

ளாயின், அதற்குத் தகுமாறு கருவாக அமைபவர் ஒருவர் இருத்தல் வேண்டும். அத்தகையவர் செயல்களையோ, அறிவுநிலைகளையோ, கொடைத் தன்மையினையோ, வீரவுணர்வையோ, வெற்றி தோல்வி களையோ, தொண்டு நிலைகளையோ, நல்லற வாழ்க்கையினையோ கருவாகக் கொண்டு, அவரின் உயர்வாந் தன்மைகளைப் பிறரும் பின்பற்றவேண்டிப் புலவர்கள் அவர் பற்றிய செய்யுள்களைப் பாடி மகிழ்வர். ஆனால் அவ்வாறு ஒருவர் மேல் உவந்து பாடி மகிழ்கின்ற நிலையில் இற்றைக் காலத்து எவரும் இலர். எனவே, அத்தகைய ஒருவர் தோன்றும் வரை யாரைப் பாடுவோம் என்று வருந்திக் கூறியதாகும் இப்பாடல்.

உண்மைப் புலமை மனத்தைக் கவர்கின்ற இனிதாந்தன்மை நிறைந்தவர் இக்காலத்து எவரும் இலரே, இனி, எவரைப் பாடு வோம் என்று கவல்வது.

யாவர்ப் பாடுகம் : யாது சிறப்புக் கருதி இக்காலத்து யாவரைப் பாடுவோம்.

கழகம்....புரந்தோர் : தமிழ்க் கழகத்தை முதல், இடை கடை என்று மூன்று முறை நிறுவி முத்தமிழ் மொழியைப் புரந்த சான்றோர்.

அன்றே மாய்ந்தனர் : அக்காலத்திலேயே மாண்டு போயினர். இல்லெனின் நான்கு, ஐந்து என்று மேலும் கழகங்கள் தோன்றியிருக்கும். இனி, அவ்வாறு இல்லாத விடத்து முத்தமிழ்ப் புரக்கும் சான்றோரும் இல்லாமற் போயினர். அத்தகையவர் இருப்பின் அவரைப் பாடலாம். அவர் இல்லாதவிடத்து எவரைப் பாடுவது என்றபடி.

அரசும் பொடிந்த : இனி, புலவர்களைப் பேணிய தமிழ் அரசுகளும் காலக் காய்ச்சலுள் பொடிந்து போயின. எனவே அவரையும் பாடுதற் கியலாமற் போனது.

வென்றியும் தோற்பும் இன்றே : அரசுகள் இலவாகவே அவற்றுள் வெற்றியும் தோல்வியும் நிகழா வாயின. அவை நிகழு மாயினும் வெற்றியை வாழ்த்திப் பாடவும் தோல்வியைத் தாங்கிப் பாடவும் ஒல்லும். எனவே அதற்கும் இடமில்லை என்றவாறு.

இரப்பார்க்கு ஒன்று தரலிலர் : மற்று, இக்காலத்து இரவலர்க்கு ஒன்று ஈயும் வள்ளலரும் இலர். அவ்வாறிருப்பின் அவரையேனும் பாராட்டிப் பாடலாம் என்று அழுங்கியதென்க.

தரினும்...., நினைவிலர் : அவ்வாறு ஒரோவொருகால் எங்கேனும் இரவலர்க்கு ஈயும் புரவலர் இருப்பினும், அவர் ஈந்ததை நன்றியுடன் நினைத்துப் போற்றும் பண்பினரும் இலர். இருப்பின்

அவரையேனும் மெச்சிப் பாடலாம் என்றவாறு. உள்ளுவந்து நன்றி நினைவிலர் என்றது, நன்றி வாயால் சொல்வதினும் உள்ளத்தால் நினைக்கத் தக்கது என்றும், அதுவும் உவந்து நினைக்கத் தக்கது என்றும் பொருள் கொள்வான் வேண்டி என்க.

கற்றல் நனியிலர்: இனி, கல்விச் சிறப்பால் பெருமையுறுவோரும், அதுவழி புலவர் நெஞ்சத்துப் புக்குப் புலவளங் கொள்வாரும் இலர் என்றவாறு.

உள்ளம் செவ்விலர்: உள்ளச் செப்பம் வாய்ந்தாரும் இலர் என்றபடி. என்னை, உள்ளச் செப்பம் வாய்த்த விடத்து வாழ்வின் அனைத்துச் செப்பங்களும் நிறைவுற அமையுமாகலின், அத்தகையோரையும் காணாத நிலையில் அவரைப் பாடுதற்கும் இயலாது போயிற்றென்க.

ஊருயும் பாடிலர்: ஊர் மக்கள் உய்யும் படியாகப் பாடாற்றுவார் இலர் என்றபடி. தூய பொதுநலவுணர்வுடன் குடி செய்ய வல்ல நடுநிலையும் ஈகவுணர்வும் உடையவர்கள் இருப்பின், அவரை ஊக்குவிப்பான் வேண்டி அவர்தம் பொதுத் தொண்டைப் பாராட்டிப் பாட வியலும். ஆனால் அத்தகையோரும் இலராயினர் ஆகையின் அவரையும் பாடற் கியலாது போனதென்க.

கள்ளத்து முதலா: கள்ளத்தையே தம் வாணிக முதலாக வைத்து.

களவு ஊதியத்து: களவுப் பொருளையே ஊதியமாகக் கொள்ளுகின்ற.

பொய்ம்மை வாணிக: பொய் வாணிகஞ் செய்யும்

போலி வாழ்வினர்: போலித்தனமான வாழ்க்கை நிலைகளை உடையவர்கள்.

இக்காலத்து உள்ளவர்தம் வாழ்வு நிலையை அனைத்து வகையினர்க்கும் பொருந்துமாறு கூறியது.

கள்ளத்தையே அடிநிலை வாணிக முதலாக வைத்துப் பொய்யையே வாணிகஞ் செய்து, களவு கொண்ட பொருள்களையே ஊதியமாகக் கருதி மகிழும் போலி வாழ்க்கையை உடையவர்கள். இவர்களை எங்ஙன் பாடுவது என்று கவன்றது.

மெய்யறு சமயத்து: மெய் நெறிகள் அற்றுப் பொய் நெறிகள் மலிந்த மதங்களைக் கொண்டதும்

சாதி மீட்பிலர் : சாதிச் சகதியில் விழுந்து மீட்க வியலாத இழிவு நிறைந்ததும் ஆகிய.

வெய்ய புன்குழாம் : வெய்தாகிய புன்மை நிறைந்த மக்கள் கூட்டம். வெய்து-கொடியது. வெம்மையும் புன்மையும் நிறைந்த மாந்தக் கும்பல்.

வீழ்ந்து : வீழ்தலுற்று. அழிந்து போய்.

செய்யுட் கருவினர் : புலவர்கள், தாம் புலனெறிச் செய்யுள்கள் யாத்தற்குரிய உட்கருவாகும் தகுதியுடைய பெருமக்கள்.

தோன்றுநாள் வரையே : தோன்றுகின்ற நாள் வரைக்கும். 'செய்யுட் கருவினர் தோன்றுநாள் வரையே, யாவர்ப் பாடுகம் கொல்லோ' என்று அடிமுடி கூட்டுக.

'இன்றுள்ள நிலைகள் மாறி மக்கள் கூட்டமும் நன்னிலை பெற்று உயர்ந்த தன்மைகளைப் பெறும் சிறந்த மக்கள் தோன்றும் வரை யாரைப் பெருமையுறப் பாடுவது' என்று அழுங்குகின்றது புலவர் நெஞ்சம்.

'முக்கழகம் நிறுவிய சான்றோர் போலவரும் இன்றிலர்; அரசுகளும் இல்லை; எனவே வெற்றி தோல்விகளுக்கும் இன்று இடமில்லை; இரவலர்க்கு ஈயும் புரவலர்களும் இல்லை; ஈயினும் நன்றி நினைக்கும் நல்ல பண்பினரும் இலர்; கல்வியில் சிறந்த நல்லறிவாளரும் இன்றிலர்; உள்ளச் செழுமை வாய்ந்த உயர்ந்தோரும் இலர்; ஊருக்காக உழைக்கும் பொதுநலங் கருதும் குடிசெய்வாரும் இலர்; இவர்கள் இல்லாத நிலை ஒருபுறத்து உளதாக இருக்கின்றவர் எல்லாரும் கள்ளத்தை முதலாகக் கொண்டு களவை ஊதியமாகப் பெறுதற்குப் பொய்யையே வாணிகமாக நடத்திப் போலி வாழ்க்கை வாழ்பவராக உள்ளனரே. இவருள் எவரைப் பாடலுக்குக் கருவாகக் கொண்டு பாடல்கள் செய்வது? எனவே, உயர்ந்த புலனெறிச் செய்யுளுக்கு இலக்கணமாக விளங்கிப் பாடுகின்ற உணர்வை யெழுப்புதற்குக் கருவாக நிற்கும் பெருந்தகையினர் இங்குத் தோன்றுகின்ற வரை எவரையும் பாடுதற்கு இயலாது' என்று, புலமைமிகு நெஞ்சம் உள்ளழுங்குவதாக அமைந்ததிப் பாடல் என்க.

இது, **பொதுவியல்** என் திணையும், **புலனெறி அழுங்கல்** என்னுந் துறையுமென்க. புலமை வெளிப்பாட்டுக்குரிய நெறி பற்றி வருந்திக் கூறுவதாகலின் புலனெறி அழுங்கல் என்னும் புதுத்துறை வேண்டுவதாயிற்று

ஈழத் தமிழ் மகனே!

—சிங்கை - கல்லாடன்.

ஈழத் தமிழ்மகனே-புகழ்
ஏழிசை கொண்டவனே!
வேழப் படைமுகத்தும்-பெரும்
வெற்றியைக் கண்டவனே!
சூழ வரும்பகையை-சிறு
துகளென வென்றவனே;
ஈழத் திருநிலத்தில்-உனக்
கெத்தனை இன்னலடா!

என்னின வாழ்வுக்கென-அங்
கெத்தனை நாள்வரையில்
தென்னவர் தொல்லையுற்றே-மனத்
தேம்பி அழுவதுவும்,
என்னிளைப் பெண்களது-கற்பை
இழிவுறச் செய்திடவும்,
ஒன்றிய மன்றத்தினர்-கூடி
ஒப்போலை இட்டனரோ?

கன்னிகர்ப் பாவையரின்-தமிழ்க்
கற்புத் திருமகளின்
பெண்மையைச் சூறையிட்ட-இழி
பேடிக் கயவர்களின்
கண்ணைப் பிடுங்கியெடு-அவள்
கற்புக்கு வேலியிடு!
திண்மை மனத்தருடன்-புகழ்
சேரப் படைகூட்டு!

முன்னைத் தமிழ்நிலமே-திரு
முடிகண்ட தென்புலமே
உன்னையான் எண்ணுகையில்-உள
ஓய்வெனக் கில்லையம்மா
தென்னைப் பனங்குருத்தாய்-என்
தெய்வத் தமிழினத்தை,
ஒன்னலர் எண்ணுகின்றார்-இதும்
ஒல்லும் வகையதுவோ!

பெருஞ்சித்திரனார் பாடல்கள்

'மருமம்' இதழின் மதிப்புரை

(கீழ்வரும் 'நூல் திறனாய்வு' திரு. **அரு. கோபாலன்** அவர்களை ஆசிரியராகக் கொண்ட **மருமம்** நவம்பர் 79 இதழில் வெளிவந்தது. அதனை நன்றியுடன் தென்மொழியன்பர்கள் பார்வைக்கு வைக்கின்றோம். —ஆ-ர்)

நூல் திறனாய்வு :

பெருஞ்சித்திரனார் பாடல்கள்

(கனிச்சாறு)

கிடைக்குமிடம் :

தென்மொழி அச்சகம். சென்னை - 6000 05.

விலை :	முதல் தொகுதி	உருபா	—	15-00
	இரண்டாம் தொகுதி	உருபா	—	11-00
	மூன்றும் தொகுதி	உருபா	—	17-50

தனித்தமிழ் இயக்கத்தின் இன்றையத் தானைத்தலைவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் அவ்வப்போது பாடப் பெற்று, தென்மொழி ஏட்டிலும், பிற ஏடுகளிலும் வெளிவந்த பாடல் களின் தொகுப்பு நூல். மூன்று தொகுதிகளாக மிகச் செப்பமான முறையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

முதல் தொகுதியில் 'தமிழ்' 'இந்தி எதிர்ப்பும் இன எழுச்சியும்' என்ற இரு பிரிவுகளில் 152 பாடல்களும்; இரண்டாம் தொகுதியில் 'நாட்டுரிமை' 'பொதுமை உணர்வு' 'இளைய தலைமுறை' என்ற மூன்று பிரிவுகளில் 115 பாடல்களும்; மூன்றும் தொகுதியில் 'காதல்', 'இயற்கை', 'இறைமை', 'பொது' என்ற நான்கு பிரிவு களில் 160 பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

மூன்று தொகுதிகளுக்குமான திட்பமான பொது முன்னுரை, ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியே நுட்பம் செறிந்த சிறப்பு முன்னுரைகள், பதிப்புரை, பாடல் முதல் குறிப்பு அகரவரிசை, பிழை திருத்தம் முதலிய வழக்கமானவற்றுடன், இதுவரை எந்தப் பாத்தொகுப்பிலும் இடம் பெறாத பாடல் விளக்கக் குறிப்புக்களும் கொண்டு, இனி பாத்தொகுப்பு வெளியிடுவோருக்கு ஒரு முன்மாதிரி யாக இந்நூல் வெளிவந்திருக்கிறது. பாரதியின் புதுமைப் பொலிவு, பாரதி தாசனின் தமிழ் வீறு, தேசிகவிநாயகரின் எளிமை,

இளங்கோவின் இனிமை, வள்ளுவரின் நுண்மாண் நுழைபுலம் அனைத்தும் ஒருங்கமைந்து, இற்றைநாள் பொருள்களைப் பற்றி, அற்றைநாள் கழகப்புலவர்கள் தொலை நோக்கில் கண்டு பாடி வைத்த பாக்களோ? என்று ஐயுறும் வண்ணம் ஒவ்வொரு பாடலும் அமைந்திருக்கிறது.

ஒருமொழி வைத்து உலகாண்ட இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் இன்றிருந்திருந்தால் இப் பாத்தொகுப்புக்கு இமயத் தொடரில் அமைந்துள்ள எல்லா வளநாடுகளையும் பரிசளித் திருப்பான்.

தம்மையே விலைபேசும் அடிமைத் தமிழர்களன்றோ இன்று மலிந்துள்ளோம்! நாம் பரிசெதுவும் அளிக்க முடியாவிட்டாலும், குடும்பத்துக்கொரு தொகுப்பை விலை கொடுத்து வாங்கினால் அது பெருஞ்சித்திரனாருக்கன்று, நமக்கு நாமே செய்துகொள்ளும் நற்செயலாகும்.

ஆம்; நம் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் இத்தொகுப்பி லுள்ள ஒரு பாடலை உள்ளத்தில் இருத்தினால் போதும், தமிழகத்திற்கு விடிவு வந்துவிடும். தமிழகத்திற்கு விடிவு என்றால், தமிழர்களாகிய நமக்கெல்லாம் தானே!

ஏனெனில், இவையத்தனையும் விடியற்பாக்கள்! அடிமைத் தலையறுக்கும் அறப்பாக்கள்! மிடிமைத் துயர் போக்கும் மீட்சிப் பாக்கள்! கொடுமையைக் குலைத்தழிக்கும் குடிசெயற்பாக்கள்! பொதுமைநலம் பயக்கும் புரட்சிப்பாக்கள்! இறைமை வாழ்வளிக்கும் இயற்பாக்கள்!

பாவலரேறு அவர்களுடைய பாக்களின் உள்ளேபுகுந்து திறனாய்வு செய்கின்ற தகுதி நம்மனோர்க்கு ஏது? கருத்துக்கருவூல மாய், கற்பனைப்பெட்டகமாய் ஒவ்வொரு பாடலையும் உணர்ச்சி ததும்ப யாத்திருக்கிறார் பாவலரேறு.

அவை தமிழுக்கு வேல்களாக, பொதுவுடைமைக்கு வாள்களாக, அறிவுக்கு விளக்காக, கொள்கை மறவர்க்குத் தெளிவூட்டும் இலக் காகத் திகழ்கின்றன.

இந்தத் தொகுப்புநூல் ஒவ்வொரு தமிழனின் கையிலும் இருப்பது அவனுக்கே பெருமையாகும். இதை யாத்துத் தந்த பாவலரேறு வாழ்கின்ற காலத்தில் நாமும் வாழ்வது நமக்கெல்லாம் பெருமையாகும்.

—'**கோ**'

இறைவா நினக்குப் பிழை செய்தனமோ?

—மறைமலையடியுறை

(அருந்தமிழ் உணர்வை அணையாது காத்து வளர்க்கும் அரிய தொண்டில் தன் சிறந்த பங்கினையும் ஆற்றி வந்துள்ள அமைப் பாகிய புன்செய்ப்புளியம்பட்டி—**மறைமலையடிகள் மன்றத்தின்** தலைவர் இரா. ஆறுமுகனார் தமது முதிரிளமையின் இடைமறைந்த பேரவலங் குறித்து எழுந்த கையறு இரங்கல் பாவரிகள் இவை.)

இறைவா நினக்குப் பிழை செய் தனமோ?
பிழை செய் தனமோ?

குறைநேர்ந் ததுவோ? கறைபடிந் திடவே—
திரைவிழுந் ததுவே! (இறைவா...)

நிறைவாம் பிறவி நிலையடைந் துற்றும்,
சிறையாம் புறத்துள் சிதர்ந்துடைந் தோடி— (இறைவா...)

உறைவாய் நீயெம் அகத்துள் எனுமோர்
இறைமை தெரிந்தும் இறைதெளி யாமல்— (இறைவா...)

புரைமை அகன்றிடும் பூதப் பிறவி,
நிறைமைத் தமிழின் நயங்கூர் அருளான்—

(வேறு)

என்றுண ராமல், நின்றறி யாமல்,
ஓர்ந்தறிந் தன்பை நேர்ந்தளிக் காமல்— (இறைவா...)

மழைநீர் அருள்தர மேலெழும் அன்புடன்
விழைபேர் அறிவதும் விஞ்சிடல் அஞ்சினம்,— (இறைவா...)

மலைபோல் எழுந்திட மாண்புறும் தென்புடன்
குலைபோல் கனிந்துளம் தெள்ளுதல் தள்ளினம்,— (இறைவா...)

அலைவார் நெடுங்கடல், ஆர்துளி போல்வரும்
நிலையாப் பிறவிகள் நீடறுந் துய்ந்திட—

(வேறு)

ஒன்றறிந் தார்ந்தோம், நின்றுளம் வேர்த்தோம்!
ஏர்மனம் பூண்போம் நேரொளி காண்போம்!
என்றளிய,
இறைவா நினக்குப் பிழைசெய் திருந்தும்
பிழைசெய் திருந்தும்:
இறைபொறுப் பாயேல், பிழைப்பருள் வாயேல்,
பிழைத்தெழு வோமே!—
பிழைத்தெழு வோமே!

சென்ற இதழ்த் தொடர்ச்சி தொடர் : 2

மலேசியத் தமிழர்

—முரசு. நெடுமாறன்.

பொருளியல் துறை

எல்லாவற்றுக்கும் அடிப்படையான பொருளியல் துறையில் தமிழர்கள் மிகவும் பின் தங்கியே உள்ளார்கள். மலேசிய இந்தியர்களின் தேசியத் தலைவர் அமைச்சர் மாண்புமிகு டான்-திரு. டத்தோ வெ. மாணிக்கவாசகம் அவர்கள், 'புதிய பொருளியல் கொள்கையும் மலேசிய இந்தியர்களும்' என்ற நீலப்புத்தகத்தின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்.

"மலேசிய இந்தியக் குமுகாயத்தில் ஏறத்தாழப் பாதிப்பேர் தோட்டப் புறத்திலும் சிறு தோட்டங்களிலும் தனித்து விடப்பட்டு விட்டார்கள். இன்னும் ஒரு பெரும் பகுதியினர் நகர்ப்புற வாழ்க்கையின் ஒதுங்கிய பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள். இதனால், மலேசிய நாட்டின் முன்னேற்றத்திலும் மாற்றங்களிலும் அவர்கள் பங்கேற்பது தாக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலாக மலேசிய இந்தியர்களின் இளம் தலைமுறையினரின் திறன்கள், வாய்ப்புகள் ஆகியவற்றையும் அது தாக்கியுள்ளது. இந்த நிலை தொடர அனுமதிக்கப் பட்டால், அஃது இக்குமுகாயத்தின் பெயர், மதிப்பு, நல்வாழ்வு ஆகியவற்றைக் கடுமையாக ஊறுபடுத்திவிடும்.

இவ்வரிகள் மலேசிய இந்தியர்களின், குறிப்பாகத் தமிழர்களின் நிலையை விளக்கப் போதுமானவையாகும். தமிழர்கள் இந்நாட்டில் உழைப்பைக் கொட்டினார்களேயன்றித் தங்கள் உயர்வைப் பற்றி எண்ணவேயில்லை. 'கறப்பது உழக்குப் பால், உதைப்பதில் பல்லும் வாயும் போகிறது' என்ற பழமொழிக்கொப்ப மாடாக உழைத்துப் பெரும் பொருளையும் சிக்கனமாகச் சேமிக்காமல் ஊதாரித்தனமாகச் செலவிட்டு உருக்குலைந்து போகும் நிலையே தொடர்ந்தது. ஒவ்வோர் ஊரிலும் ஒரு கோயில் இருந்தது போலவே கள்ளுக் கடையும் இருந்தது. கள்ளச் சாராயக் கடைகளும் மூலை முடக்கெல்லாம் இருந்தன. தமிழர் வருவாய் முழுதும் குடியால் அழிந்ததோடு உடற் செல்வமும் உருகிக் கரைந்தது. எத்தனையோ உயிர்கள் கள்ளச் சாராயத்திற்கு இரையாயின. ஈட்டும் வருவாய் போதாமல் நாளும் கடன் சுமை ஏறியது. நலியும் நிலையை மாற்ற நீண்ட நெடுங் காலம் செயலளவில் யாராலும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை

இந்த நிலையில் தோட்டத் துண்டாடல் என்னும் காட்டு தீ பரவியது. இந்த வாழ்வு என்றும் நிலையானது என்று இறுமாந்

திருந்த தமிழர் நெஞ்சில் இடி விழுந்தது. 'துண்டாடல்' என்னும் 'அணுக்குண்டு' விழுந்த பின்னர்தான் தமிழர் யார்? அவர் நிலை யென்ன? அவர்களின் எதிர்காலம் என்ன ஆகும்?' என்ற சிந்தனை மக்களிடத்தில் எழுந்தது. சாறெடுக்கப்பட்ட சக்கையெனத் தோட்டப்புறத் தமிழர் புறக்கணிக்கப்பட்ட நிலையைக் கண்டு கலங்கிய உள்ளங்கள் பல. துண்டாடல் கொடுமையைக் கண்டு மனம் உருகி மலேசியத் தமிழ்ப் பாவலர்கள் பாடிய பாடல்கள் பாடு வோரின் கண்களைக் குளமாக்கும். நெஞ்சை நெக்குருகச் செய்யும். குமுகாயத் தலைவர்கள் பரிவோடு தோட்டத்துண்டாடலை ஒழிக்கப் பெருமுயற்சி மேற்கொண்டார்கள் என்றாலும் சட்டம் இடம் தராத நிலையில் அல்லல்படும் தமிழர்களின் கண்ணீரைத் துடைக்கும் வழி யறியாது தவித்தனர்.

தேசிய உடைமைக் கூட்டுறவுக் கழகம்

தமிழர் நெருப்பாற்றில் நீந்த வேண்டிய கொடுமையான நிலை உருவான இந்த நேரத்தில் மலேசிய இந்தியப் பேராயத்தின் அன்றையத் தேசியத் தலைவராயிருந்த துன். சம்பந்தனார் அவர்கள் ஓர் அரிய பொருளியல் இயக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

1960-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட தேசிய உடைமைக் கூட்டுறவுக் கழமே மலேசிய நாட்டுத் தமிழர்களுக்கு முதன் முதலில் அமைந்த பொருளியல் நிறுவனமாகும். குறைந்த வருவாய் உடைய வர்களுக்கேற்ற முறையில் 100 வெள்ளிக்கு ஒரு பங்கு என்ற முறை யில், அதையும் மாதம் பத்துப் பத்து வெள்ளியாகச் செலுத்தலாம் என்ற சலுகை முறையை ஏற்படுத்தியதால், ஆயிரக்கணக்கானவர் கழகத்தில் உறுப்பியம் பெற்றனர். எதுவும் செய்யமுடியாத ஏழைகள் என்று தாழ்வாகக் கருதப்பட்ட தோட்டப்புறத் தமிழர் களின் பத்து வெள்ளித் திட்டம் பல தோட்டங்களை வாங்கியது.

இன்று 19 தோட்டங்கள் சொந்தமாகியுள்ளன. துண்டாடல் அரக்கனின் முதுகெலும்பு உடையத் தொடங்கியது. உலகளாவிய புகழ்பெற்ற தேசிய நில உடைமைக் கூட்டுறக் கழகம் அமைத்த தால் சம்பந்தன் கூட்டுறவுத் தந்தை என்ற சிறப்பைப் பெற்றார். கூட்டுறவுக் கழகத்திற்கு அடுத்தபடியாகப் பாட்டாளிகளை வழி நடத்தும் உலகப் புகழ் பெற்ற மாபெரும் இயக்கமான 'தேசியத் தோட்டத் தொழிலாளர் கழகம்' ''அலோனியர்சு'' என்ற பொருளியல் நிறுவனத்தைத் தோற்றுவித்ததோடு பலநோக்குக் கூட்டுறவுக் கழகத்தையும் ஏற்படுத்தியது. தோட்டங்கள் வாங்கப்பட்டதோடு தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன. இப்போது கரும்புத் தோட்டம் நிறுவும் திட்டமும் விரைந்து செயற்பட்டு வருகிறது.

நேசா பல நோக்குக் கூட்டுறவுக் கழகம்

பொருளியல் உணர்வு பரவலாக ஏற்பட்ட நேரத்தில் 1974-ஆம் ஆண்டு இந்தியப் பேராயத் தேசியத் தலைவரான டான்-திரு. டத்தோ வெ. மாணிக்கவாசகம் அவர்களால் நேசா பல நோக்குக் கூட்டுறவுக் கழகம் நிறுவப்பட்டது. தொழில் புரியக் கடன் வழங்கும் திட்டம், வாடகை வண்டி நடத்தும் திட்டம் போன்ற அரிய திட்டங்களை நேசா சிறப்பாகச் செயல்படுத்துகிறது. மேலும், மலேசிய இந்தியப் பேராயத்தின் உதவித் தலைவர்களில் ஒருவரும், மேலவைத் துணைத் தலைவருமான டான்-திரு. டத்தோ எசு. ஓ. கே. உபயதுல்லா அவர்களின் தலைமையில் சிறு தொழில் முதலீட்டு நிறுவனம் அண்மையில் அமைந்துள்ளது. குறைந்த வருவாய் உடையோரை முதலாளிகளாக்கும் இத்திட்டம் சிறப்பான அடிப் படைகளோடு செயல்படத் தொடங்கியுள்ளது.

தொழிலாளர் மேம்பாட்டுக் கூட்டுறவுக் கழகம்

இக்கழகம் இவ்வாண்டு மலேசிய இந்தியப் பேராயத்தின் துணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாண்புமிகு ச. சாமிவேலு அவர்களால் அமைக்கப்பட்டது இக்கழகம் வீடு கட்டும் திட்டத்தை நாடெங்கும் செயல்படுத்தியுள்ளது. ஏழைத் தமிழர்களுக்குக் குறைந்த விலையில் தரமான வீடுகள் கிடைக்கக் கூட்டுறவு முறையில் முனைப்போடு செயல்படத் தொடங்கி யுள்ளது.

நாடெங்கும் தமிழ் இளைஞர் மணி மன்றம் என்ற பெயரில் தனித்தனியே செயல்பட்டு வந்த மன்றங்களை ஒன்றிணைத்து 1964-இல் பினாங்கில் அமைந்த தமிழ் இளைஞர் மணி மன்றங்களின் பேரவை, மொழி, கலை, பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றியுள்ளது.

தோட்டப்புற மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்

அரசு தோட்டப்புற மக்களுக்குச் சொந்த வீடு உருவாக்கித் தரும் திட்டத்தைச் செயல்படுத்த முன் வந்துள்ளது. தோட்டப் புறத்தில் முதலாளிக்குச் சொந்தமான வீட்டிலேயே காலமெல்லாம் வாழாமல், சொந்த வீட்டில் உரிமையோடு வாழ வாய்ப்பளிக்கும் இத்திட்டத்திற்கு அரசு ஒரு கோடி சுழல் வைப்பு ஏற்படுத்தியுள்ளது.

இப்படிப் பல்லாற்றானும் தமிழர்களின் நிலையை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை எண்ணும்போது இன்றைய தமிழர்களின் எண்ணத்தில் பொருளியல் சிந்தனை பூத்துள்ளதை உணர முடிகிறது

என்றாலும், இன்னும் எதிர்பார்க்கும் அளவு வேரோடவில்லையென்றே சொல்ல வேண்டியுள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் நிலைமை சற்று மேம்பாடு காணுமென்று உறுதியாக நம்பலாம்.

கல்வி

கண்களுக்கு ஒளி வழங்குவது கல்வி; செல்வங்களிலேயே அழியாத பெருமை கொண்டது கல்வி. ஆனால் மலேசியத் தமிழர்களுக்கு, குறிப்பாகத் தோட்டப்புறத் தமிழர்களுக்குத் தொடக்கத்தில் குடியமைப்பு ஆட்சியில் ஏதோ சில சொற்கள் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதுமென்ற அடிப்படையிலேயே 'கல்வி' வழங்கப் பட்டது. கோயில்களிலும், குழந்தைப் பாதுகாப்பு நிலையங்களிலும் (ஆயாக் கொட்டகை) மாட்டுத் தொழுவத்தில் கூட வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பின் கல்வித்துறை மறுமலர்ச்சி யடைந்தது. இரசாக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்தது. தேசிய அளவில் அனைத்துக் குழந்தைகளும் ஒரே வகையான பாடத்தைப் பயிலும் வாய்ப்பு கனிந்தது. தமிழ் சீனம் முதலிய தாய் மொழிப் பள்ளிகளும், தேசிய உணர்வோடு சீராக இயங்கத் தொடங்கின.

தமிழர்கள் பெரும்பாலும் தோட்டப் புறங்களில் வாழ்ந்ததால் வாய்ப்புகள் நிறைந்த பள்ளிக் கட்டிடங்களைத் தமிழ்ப் பள்ளிகள் பெற இயலவில்லை. சிற்சில இடங்களில் மட்டுமே ஒழுங்கான புதிய கட்டிடங்கள் எழுந்தன. கூட்டுப் பள்ளிகள் மூலம் சில பள்ளிகள் சீர்படுத்தப்பட்டன. தமிழர்களின் பொருளியல் நிலை பிள்ளைகளுக்குச் சிறப்பாகக் கல்வியை வழங்க உதவவில்லை. மேலும், சில பெற்றோர் தொய்வக் (ரப்பர்) காடுகளுக்கும் செம்பனைத் தோட்டங்களுக்கும் தங்களுக்கு உதவியாகப் பிள்ளைகளை அழைத்துச் செல்வதாலும் பல குழந்தைகள் கல்வி பெறும் வாய்ப்பை இழக்கின்றனர். குழந்தைகள் வளரும் சூழ்நிலை, பெற்றோர்களின் கண்காணிப்பின்மை, ஊட்டச் சாரமின்மையால் உடல் வளம் குன்றிய பிள்ளைகளின் இரங்கத்தக்க நிலை, மேலும் எழுத்தில் வடித்துக்காட்ட இயலாத வேறுசில முட்டுக் கட்டைகளும் தமிழ்க் குழந்தைகளின் கல்வியைத் தாக்குகின்றன. தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் மட்டுமின்றித் தேசியப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளுக்கும் மேற்காணும் இடையூறுகள் உண்டு. இன்று மலேசியாவில் அறுநூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகள் உள்ளன. எண்பத்தைந்தாயிரத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் தமிழ்ப் பள்ளிகளில் பயில்கின்றனர். ஏறக்குறைய இதே எண்ணிக்கையுடைய பிள்ளைகள் தேசியப் பள்ளிகளில் பயில்கிறார்கள். தேசியப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும் தாய் மொழி பயில வாய்ப்புண்டு. 15 குழந்தைகள் விரும்பிக் கேட்டால் தாய்மொழிப் பயிற்சிக்கு வழிவகை செய்யப்படுகிறது. பல பள்ளிகள்

பெற்றோரின் விருப்பத்தைக் கேட்பதில்லை. பெற்றோர்களில் சிலர் தாய்மொழிப் பயிற்சியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

இடைநிலைப் பள்ளிகளில்

தாய்மொழிப் பள்ளிகள் 6-ஆம் வகுப்புடன் நிறைவுறுகின்றன. பின்னர் இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கிலமொழி தவிர்த்த அனைத்துப் பாடங்களும் தேசிய மொழியிலேயே நடத்தப்படுகின்றன. இங்கும் பதினைந்து மாணவர்கள் விரும்பினால் தமிழ் பயிலலாம். என்றாலும், பெரும்பாலான பள்ளிகளில் தமிழ்ப்பாடம் ஒழுங்காக நடத்தப்படுவதில்லை. இதனால் பல்கலைக் கழகம் செல்லும் மாணவர்கள் அங்குத் தமிழ்ப்பாடம் எடுத்துப் படிப்பதில் பெரிதும் துன்புறுகின்றனர்.

கல்வியும் மொழியும்

"கல்வி எந்த மொழியிலும் இருக்கலாம்; தாய்மொழியில்தான் பெற வேண்டுமென்பதில்லை; தாய்மொழிப் பள்ளிகளில் மொழிப் பாடத்தைத் தவிர மற்றெல்லாப் பாடங்களும் தேசிய மொழியிலேயே இருந்தால் நம் மாணவர்கள் விரைந்து முன்னேறி விடுவார்கள்" என்று ஒரு சாரார் கூறுகின்றனர். "தொடக்கக் கல்வி தாய்மொழியில் பெறுவதே இயற்கையானது. தாய்மொழிப் பள்ளிகளில் தேசிய மொழி, ஆங்கிலம் தவிர்த்த அனைத்துப் பாடங்களும் தாய்மொழியிலேயே நடைபெற வேண்டுமென்றும், இப்போதுள்ள முட்டுக் கட்டைகளை அகற்றினால், தாய்மொழிப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் முன்னேற்றம் காண்பதில் எந்தத் தடையும் இருக்க முடியாது" என்றும் மற்றொரு சாரார் கருதுகின்றனர். சொந்த மொழி, கலை, நாகரிகம், பண்பாடுகள் அழியாமல் காக்க—தமிழர் என்ற மரபுணர்வு மாறாமல் வாழத் தாய்மொழிப் பள்ளிகளில் தாய்மொழியே பயிற்று மொழியாகத் தொடர வேண்டுமென்று மற்றொரு சாரார் உரைக்கின்றனர்.

தமிழ் இலக்கியக் கழகம்

தமிழ்ப் பள்ளிகள் நிலைத்து இயங்க வேண்டுமென்பதில் தமிழ்த்திரு இர. ந. வீரப்பன் அவர்களின் உறுதிமிக்க தலைமையில் இயங்கும் தமிழ் இலக்கியக் கழகம் பெரிதும் ஆர்வங்கொண்டு பாடு பட்டு வருகிறது கல்வி வளர்ச்சி மாநாடுகள் கூட்டிக் குமுகாயத்தின் உணர்வுகளை அரசுக்கு உணர்த்தி வருகிறது. மலேசிய அரசுக்குத் தாய்மொழிப் பள்ளிகளைத் தேசியப் பள்ளிகளாக மாற்றும் எண்ணம் இல்லை. (தொடரும்)

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

எடுத்துக் காட்டாக ஒன்றை மட்டும் இங்கு விளக்குவோம், இம் மேட்டைச் சிறிது அழற்சி செய்யக்கூடிய பொருள்களால் தேய்த்தால், ஆண்குறி எழுச்சி அடைகிறது. அவ்வாறே சிறுநீர்ப்புற வழியில் எந்த இடத்தில் அப்பொருள்களைக் கொண்டு தேய்த்தாலும் ஆண்குறி எழுச்சி அடைகிறது. அடிக்கடி தேய்த்தால், இழையம் தடித்துப் போகின்றது. ஆகவே முன்னவற்றை விட மிகுந்த ஆற்றலுடைய அழற்சிப் பொருள்களைப் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. இவ்வாறு அழற்சிப் பொருள்களைப் பயன்படுத்துவதால் சொல்லொண்ணுத் தீங்குகள் உண்டாகின்றன. இவ்வுறுப்பில்தான் கோளாறு இருக்கிறது என்று ஐயத்திற்கு இடமின்றித் தெரிந்தாலன்றி, இவ்வுறுப்பில் கை வைக்கவே கூடாது. மருத்துவம் செய்வதும், இதில் தேர்ச்சி உடைய வல்லுநர் மூலமாகவே இருக்க வேண்டும்.

'புராசுடேட்' சுரப்பியில் அல்லது ஒளிநீர்ப் பையில் என்புருக்கி ஏற்படின் அலித்தன்மை உண்டாகும். 'புராசுடேட்' சுரப்பி, சிறுநீர்ப்புற வழி, சிறுநீர்ப்பை, ஆகியவற்றில், கல்லோ, கட்டியோ உண்டானாலும், குகைப் பொருள்களில் குருதிக்கட்டிகள் அடைத்துக் கொண்டாலும் அலித்தன்மை உண்டாகலாம். இடுப்புக்கும் அல்லது மலவாய்க்கும், இடுப்பு வளைவுக்கும் இடையில் உள்ள உறுப்புகளில் காயங்கள் ஏற்பட்டால் ஆண்மை குறைகிறது; அல்லது அழிகிறது. எழுச்சிப் பொருள்களில் அல்லது ஆண்குறி மேட்டில் கட்டிகள் உண்டானால் அலித்தன்மை ஏற்படலாம். மலக் குடலில் மூலநோய் ஏற்படின் தாங்க முடியாத வலி உண்டாகிறது. இந்த வலியால் அலித்தன்மை ஏற்படலாம். ஆண்குறிக்குக் கேடு உண்டானாலோ அல்லது வேறு பொருள்கள் ஆண்குறியில் புகுந்திருந்தாலோ அலித்தன்மை உண்டாகலாம். மேலே கூறிய குறைகளை அறுவை முறை மூலம் சரி செய்யலாம். ஆனால் உறுதியாக முழு வெற்றி கிட்டும் என்று சொல்வதற்கில்லை. இவ்வகை நிகழ்ச்சிகள் மிக அருகியே காணப்படுகின்றன.

ஆண்குறிப் பூவின் மீது மெல்லிய தோல் மூடிக் கொண்டிருக்கிறது. இதற்குப் பூ மூடி எனப் பெயர். இத்தோல், ஆண்குறியின் மற்றப் பகுதிகளை மூடி உள்ள தோலின் முடிவான பகுதியேயாகும். இயல்பான நிலையில் பூ மூடியைப் பின்புறமாக மடித்துத் தள்ள இயலும். அவ்வாறு செய்தால் பூ வெளியே நன்கு தோன்றும். சில

வேளைகளில் இத்தோல் பின்புறமாக மடிக்க முடியாதபடி வலுவாகவோ, அல்லது பூவுடன் ஒட்டிக் கொண்டோ இருக்கும். அதனால் ஆண்குறியின் எழுச்சி தடைப்பட்டு அலித்தன்மை உண்டாகலாம். சிறுநீர் வெளியேறும் துளை மிகச் சிறிதாக இருந்தாலும், 'புராசுடேட்' சுரப்பி, ஒளிநீர்ப்பை ஆகியவற்றில் அழற்சி ஏற்பட்டாலும், சிறுநீர்ப் புறவழியில் சுருக்கம் ஏற்பட்டாலும் அலித்தன்மை உண்டாகலாம். இவ்வகை அலித்தன்மையை அறுவை முறை மூலம் மிக எளிதில் நீக்கிவிடலாம்.

அலித்தன்மை, எவ்வகைக் காரணங்களால் ஏற்பட்டதாக இருப்பினும் முடிவில் பெரும் அளவில் தாக்கப்படுவது, ஆண்குறியின் எழுச்சியேயாகும். எழுச்சியே ஏற்படுவது இல்லை; அல்லது, வேண்டிய அளவு எழுச்சி உண்டாவதில்லை; அல்லது, பெண்குறியை ஊடுருவிச் செல்லும் அளவுக்கு எழுச்சி உண்டாவதில்லை; அல்லது, எழுச்சி ஏற்பட்டுப் புணரும் பொழுதோ, அல்லது புணர்ச்சியின் துவக்கத்திலேயோ தளர்ச்சி அடைந்து விடலாம். உடலில் ஏற்படும் மாற்றங்களால், ஆண்குறியின் எழுச்சி தாக்கப்படுவது போன்று, உடல் வேலைகளில் சிலவே அந்த அளவிற்குத் தாக்கப்படுகின்றன. உடலின் இயற்கைக் கோளாறுகளினாலோ, காயங்களினாலோ, எழுச்சி ஏற்படாது இருந்தால், அதற்குரிய காரணங்களை அறிந்து கொள்ளுதல் மிக எளிது. ஆனால் எவ்வகையான வெளிக்குப் புலப்படும் காரணங்கள் இன்றியே, மனக் காரணத்தால் மட்டுமே எழுச்சி தடைப்படலாம். இதுவே பெரும்பான்மையாக நிகழ்வது. புணரும் பெண்ணை எக்காரணம் கொண்டேனும் பிடிக்கவில்லையானால், ஆண்குறி எழுச்சி அடைவதே இல்லை. புணர்ச்சியின்போது, புணர வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டால்தான், ஆண்குறி சரியானபடி எழுச்சி கொள்கிறது. இஃதை ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பழக்கத்தில் கண்டிருக்கலாம்.

மருந்துகளும், பிற பொருள்களும் சில வேளைகளில் அலித்தன்மையை உண்டாக்கலாம். பால் உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் பொருள்கள் உள்ளன போன்றே, பால் உணர்ச்சியை வேருடன் களையக்கூடிய பொருள்களும் உள. அவற்றைப் "பால் உணர்ச்சிக் கொல்லிகள்" என அழைக்கலாம். ஒரு மருந்து, சரியான பால் உணர்ச்சிக் கொல்லியானால், அதன் தன்மை சிறிது நேரமே நின்று, பின் அதை உண்ட மாந்தன் தன் பழைய இயல்பான நிலையை அடையவேண்டும். சில பால் உணர்ச்சிக் கொல்லிகளை, நீண்ட நாட்களாகப் பயன்படுத்திவரின், முடிவில் மாற்ற இயலாத அலித்தன்மை வந்தடையும். இப்பேர்ப்பட்ட பால் உணர்ச்சிக் கொல்லிகளில் முதன்மையானவை 'உணர்ச்சி ஊட்டிகள்" என்ற மயக்க மருந்துகள். இவை நச்சுத்தன்மை உடையன. அவற்றில் முதன்மையானவை, 'அபின்', 'கொகைன்', 'மார்பின்', 'குளோரல்' முதலியன. எட்டியின் சத்தாகிய, 'இசுட்ரிக்னி'னும் இவ்வகையைச் சார்ந்ததே,

வெள்ளை நஞ்சு பால் உணர்ச்சி ஊட்டும் பொருள் வகையைச் சாரா விடினும், இஃதும், அந்த நஞ்சுகள் போன்றேதான் வேலை செய் கிறது. 'புரோமைடு' பால் உணர்ச்சியைக் குறைப்பதில் பெயர் பெற்றது. அதைப் பல நாட்கள் பயன்படுத்தின், 'புரோமின்' தன்மை உண்டாகிறது. 'புரோமின்' தன்மையின் தலையாய் அடை யாளம் அலித்தன்மைதான். பொட்டாசியம் நைட்ரேட்டு' அல்லது சால்ட்டு பீட்டர்' எனக் கூறப்படுவதும் முன்னது போன்றே, ஆனுல் சிறிது குறைந்த அளவில், வேலை செய்கின்றது.

புகையிலைக்கும் அலித்தன்மைக்கும் தொடர்பு உண்டா' இல்லையா என்பதுபற்றி நீண்ட காலமாகச் சொற்போர்கள் நிகழ்ந்து வருகின்றன. மிகுந்த அளவில் புகையிலையைப் பயன் படுத்திஞல் மாந்தனுடைய ஆண்மை குறையலாம்.

வெறியக் குடிப்பழக்கத்தால் அலித்தன்மை உண்டாகிறதா, இல்லையா என்பது பற்றியும் நிறையச் சொற்போர்கள் நிகழ்ந்து வருகின்றன. வெறியம் குடித்த உடனே நிகழக்கூடியவற்றை எல்லாரும் அறிவர். குறிப்பிட்ட ஓர் அளவில் குடித்தால் அது பால் உணர்ச்சியைத் தூண்டக்கூடியது. பால் உணர்ச்சி நடுவங் களைத் தூண்டி விடுகின்றது. பலவகை மனக் கவலைகளால் பால் உணர்ச்சி அழுத்தப்பட்டிருக்கலாம். வெறியம் அக்கவலைகளை எல்லாம் மறக்கும்படி செய்து, பால் உணர்ச்சி நடுவங்களைத் தூண்டி விடுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் வெறியம் மிகுதி யானுல், ஆண்குறியின் எழுச்சி நடுவங்களைத் தாக்கி, ஆண்குறி தொய்ந்து போகும்படி செய்துவிடுகிறது. ஆகவே தற்காலிகமாக அலித்தன்மை உண்டாகிறது. இது "வெறிய அலித்தன்மை" எனப் பெறும். இது வெறியம் உடலிலிருந்து வெளியேறியவுடன் சரியாகிவிடும். பழக்கமாக வெறியம் குடிக்கத் துவங்கிஞல், குடிப்ப வருடைய ஆண்மைக்கு மாற்ற முடியாத கேடு வந்தடையும். வெறி யத்தை மிகுந்த அளவில் குடித்தால் அது நடுவண் நரம்பு மண்டலத் தைத் தாக்கிப் பழுதடையச் செய்கிறது. குடிகாரர்களுக்கு உண் டாகும் உடற்கேடெல்லாம் வெறியத்தால்தாம் உண்டாகின்றன என மக்கள் நினைக்கின்றனர். தமிழ்நாட்டில் மதுவிலக்கு சட்ட மாக்கப்பட்டிருப்பதை அறிவோம். வெறியம் பழக்கமாகக் குடிப்ப வனுக்கு அது கிடைக்காததால் எப்பொழுதும் அவன் மனம் அதையே நாடி நிற்கும். ஆகவே கள்ளச்சந்தையில் விற்கும் வெறியத்தை நாடிச் செல்கின்ருன். இந்தக் கள்ளச்சந்தை வெறியத் தில் என்ன என்ன கலந்திருக்கின்றன என்பதை ஒருவேளை ஆண்ட வனே அறிவானே என்னவோ. அப்பப்பா! அதை நினைக்கவும் நெஞ்சு நடுங்குகின்றது. கள்ளச்சந்தை வெறியத்தில் பல நஞ்சுகள் கலந்துள்ளன. இந்த நஞ்சுகளே வெறியத்தை விடப் பலமடங்கு கேடுகள் விளைவிக்கின்றன. (தொடரும்)

‘தமிழ் எழுத்து(க்)கள்: நேற்று இன்று நாளை - இன்னொரு கோணம்’

நா. சந்திரகுமார்.

(பின் வருவது, மேற்காணும் தலைப்பில் அக்தோபர்/நவம்பர்’79 ‘கணையாழி’ இதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கமாகும். (வடசொற்கள் மட்டும் களையப் பெறுகின்றன.) இந்தக் கட்டுரை, அதே கணையாழி’யின் மே ’79 இதழில் வெளிவந்த திரு ஐராவதம் மகாதேவனின் கட்டுரைக்கு மறுப்பாக வந்துள்ளது. திரு. மகாதேவன், தமது கட்டுரையில்: ‘தமிழ் எழுத்துகளில் காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும், பிற மொழிகளுடன் ஒப்புநோக்கி இனி மேற் கொள்ளத்தக்க சீர்திருத்தங்களையும் குறிப்பிட்டிருந்தார்; உயிர் மெய்க் குறியீடுகளை ஏழு வகைகளில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுவிட்டு, பின்னர் “இவ்வாறு... பல சீர்திருத்தங்களைச் செய்வதைவிட, ஒரேயடியாக உரோமன் எழுத்து முறையை நடைமுறைக்கு கொண்டு வருவதுதான் ‘எளிதாகவும்’ சிறந்ததாகவும்’ இருக்கும்” என்று தெரிவித்தும் இருந்ததாகக் ‘கணையாழி’யின் ஆசிரியர் குறிப்பில் காணப் பெறுகின்றது!

(ஆசிரியர்.)

1. **நேற்று :** சிந்துவெளி நாகரிகத்தில் வழங்கிய எழுத்துகளே பிற்கால இந்திய எழுத்து முறைகளுக்கு முன்னோடி என்பதைப் போதிய அடிப்படை இன்மையால் ஏற்க மறுக்கும் கட்டுரையாசிரியர் (திரு. மகாதேவன்), சமண மற்றும் பௌத்த மதத்தினரே தமிழுக்கு எழுத்து முறை வகுத்தவர் என்பதைப் போதிய அடிப்படை இல்லாது, உணரும்போதே வலியுறுத்துவது ஏன்?

2. **இன்று :** பழங் கன்னடத்தில் வழக்கில் இருந்த-**ள**-இன்று வழக்கொழிந்தமையால் வரி வடிவத்தையும் இழந்து நிற்கிறது என்ற ஆசிரியரின் கூற்று முற்றிலும் தவறானது: இன்றைய கன்னடத்திலும்-**ள**-வெகுவாக வழங்கி, நிலைத்த வரி வடிவத்தையும் பெற்றுள்ளது.

3. *(2)*: ஒலிச் சிக்கல்களை ஆராயும் பொழுது ஆசிரியர் வெளியிட்டுள்ள கருத்துகள் பலவற்றை நம்மால் ஏற்க இயலவில்லை.

(i) தமிழ்மொழியின் பலுக்கலே காலப்போக்கில் மாறி வந்திருப்பதற்குச் சான்ருக வல்லொலி-மெல்லொலி (இட) மாற்றத்தை (Surd-Sonant Convertibility) ஆசிரியர் பெருங் குழப்பத்துக்கிடையே குறிப்பிடுகிருர்; இது முற்றிலும் பொருத்த மற்றது. வல்லொலி-மெல்லொலி இடமாற்றமே காலப் போக்கில் தோன்றிய மாறுதல் என்றும், முதலில் வல்லொலி மட்டுமே தமிழில் அமைந்தது என்றும் **தெ. பொ. மீ யைப் பின்பற்றி ஆசிரியர் குறிப்பிடுவாராயின், இதைத் தனிப்பட்ட முறையில் மறுக்க வேண்டியுள்ளது.** பேராசிரியர் திரு. கமில் சுவலெபில் அவர்கள் பல அக, மற்றும் புறச்சான்றுகளைக் கொண்டு வரலாற்றுக் காலந்தொட்டே இந்த வல்லொலி-மெல்லொலி இடமாற்றம் தமிழியல்பாக இருந்தது என்றும் நிலைநாட்டியுள்ளார்: (K. Zvelebil. Comparative Dravidian Phonology (Mouton) p. 76-82). மேலும் பண்டைத் திரவிட மொழியியல்பாகவும் இது இருந்தது என்றும் திரவிட மொழியியல் வல்லுநர்கள் நிலைநாட்டி யுள்ளனர் இங்குக் கவனமாகக் குறிக்க வேண்டியது யாதெனில், இரட்டைமெய் (Geminal Cluster) மற்றும் மெய்யின் வல்லொலி-மெல்லொலி இவையிரண்டும் இருவேறு முதலொலிகள் (Phonemes) ஆகும். ஆனுல்,இரட்டைமெய் (பொதுவாக) வல்லொலியையே பலுக்கலில் ஒத்தது. ஆக, மொழியிடை மெய் (மெல்லினத்துடன் புணரும் போது) மெல்லொலியாகவோ, (தனியாக நின்ருல்) தேய் மெல்லொலியாகவோ மட்டுமே தமிழகத்தில் எக்காலத்தும் ஒலிக்கப்பெற்று வந்துள்ளது: (Sonant, or semi-voiced to voiced occlusive). ஆனுல் மொழிமுதல் மெய் பெரும்பான்மையினரால் வலித்தொலிக்கப் பெற்ருலும், சிலர் சில சொற்களில் மெலித்தொலிக்கின்றனர். (எ-டு.: Kudisai, Gudisai-குடிசை; Thittam, Dhittam-திட்டம்; San, Jan-சாண், போன்றவை). மேலும், இரு சொற்களை ஒன்ருகவோ, வெவ்வேருகவோ பலுக்கும் பாங்கைப் பொறுத்து இருவகைப் பலுக்கலும் அமைகின்றன: (எ-டு: Idadhuhan, Idathu kan-இடது கண்; Ennahorachchal, Enna korachc hal-என்ன குறைச்சல் போன்றன). இச் செய்திகள் குறித்துக் கால்டுவெலின் ஒப்பிலக்கணத்திலும், கிருட்டிணமூர்த்தியின் மேற் குறிப்பிட்ட கட்டுரையிலும், விரிவாகக் காணலாம். இவ்வனைத்து இயல்புகளையும் நோக்கினுல், ஆசிரியர் கூற்றின் பொருந்தாமை தெளிவு. தமிழில் வகையொலிகளுக்குத் தனித்தனி வரிவடிவங்கள் அமைந்தால் தமிழ் எழுத்துகளால் தேவையற்ற குழப்பம் விளையுமே தவிர, **தமிழின் ஒலிகளை இப்பொழுது இருப்பதைவிட இன்னும் பொருத்தமாக எடுத்துக் காட்ட இயலாது.** எடுத்துக் காட்டாக, Avuha-அவுக-என்ற திருநெல்வேலிக் கிளவியை-அவுஹ-என்று எழுதுவதில் தேவையற்ற மரபுப் புறக் கணிப்புதான் மிஞ்சும்; இவ்வாறு செய்யப் போனுல், ஆளுக்கு ஆள்

மாறும் பலுக்கலுக்கேற்ப ஒரே சொல்லை வெவ்வேறு வகையில் எழுதவேண்டியிருக்கும். தமிழுக்குத் தனி-ஐ-குறி பொருத்தமற்றது என்பதும் இதனால் தெளிவு. கன்னடத்தையும், தெலுங்கையும் மேற்கோள் காட்டுவதும் பொருந்தவில்லை-அளவுக்கு மீறிய அயல்மொழி (வடமொழி)ப் பாதிப்பால் அமைந்த அவர்களின் எழுத்து முறையிலும், மேற்குறிப்பிட்ட வகைகளில் (இரு சொற்றொடர் போன்றவற்றை எழுதும்போதும்) தடுமாற்றந்தான் விளைகிறது. இதனால்தான் மலையாளத்தில், அனைத்து எழுத்துக் குறிகள் இருந்தபோதும், சொந்தச் சொற்களுக்குத் தமிழ் எழுத்து மரபையும், வடசொல்லுக்கு வடமொழி எழுத்து மரபையும் அவர்கள் இன்றளவும் பின்பற்றுகிறார்கள்! எடுத்துக் காட்டாக: "பொது" என்ற சொல்லை மலையாளத்தில் எழுதுகையில்-dh-என்ற பலுக்கல் தரும் 'து'வை அவர்கள் பயன்படுத்துவதில்லை. வல்லினம் பலுக்கலுள்ள 'து'வையே பயன்படுத்துகிறார்கள்.

(ii) உலகத்து மொழிகள் அனைத்திலும் ஒவ்வொரு வகையில், சிற்சில சொல்லமைப்பில் காணப்படும் வல்லொலி-மெல்லொலி மாற்றம்,[1] தமிழில் நெறிவிலக்கின்றி வழங்குகிறது. மற்ற மொழிகளில் முதற்பார்வைக்குத் தான்தோன்றியாக (arbitrary) அமையும் இத்தகு மாற்றம், பொதுமுறையாகத் தமிழில் வழங்குவதால் தடையின்றி எளிதில் புரிந்துகொள்ள முடியும்-முதற்பார்வையிலேயே, இது இப்படியிருக்க, **முதலொலிகளையே** குறிக்கும் தமிழ் எழுத்துமுறை, முதலொலி-வகையொலி என்று சீராகப் பகுக்க முடியாமையால், **ஒலிகளைக்** குறிக்கும் மற்ற எழுத்து முறைகளிலிருந்து மாறுபடுவது இயல்பே. இதனால் ஏற்படும் 'திகைப்பை'(!)காரணங் காட்டி எழுத்து முறையை மாற்ற வேண்டுமென்கிற ஆசிரியரின் கூற்று ஏற்க முடியாதது.

(iii) பொதுப்படையாக, 'புதிய ஒலிகளைத் தமிழில் 'இனி எப்போதும் சேர்க்கமாட்டோமென்று கூறுவது அறிவுடைமை

(Ref.) [1] The Conversion of a surd into its sonant or vice versa is abundantly illustrated in the history of every language (e.g. d <—> t, s <—> z, in English).—W. D. Whitney, Language & the Study of Language.

h ஒலியைப் பற்றி: Nearly all languages in which the aspirate h has existed. have shown a tendency to drop it, and many have dropped it altogether.—Tucker, 'Introduction to e Natural history of Language'.

யாகாது' என்று கூறிச் செல்லும் ஆசிரியர், கடந்த ஐம்பது ஆண்டுகளில், பிறமொழித் தாக்கத்தாலோ, வேற்று மொழியினர் பெயர் அல்லது ஊரைக் குறிக்கவோ, முதலொலி மாற்றமோ, புதுக்குறி புகுத்தலோ செய்த எந்த ஒரு பண்பட்ட, மரபு வாய்ந்த மொழியை யாவது எடுத்துக் காட்டுவாரா? **இத்தகு ஒலி மாற்றம் மொழி மாற்றமே அன்றி, எழுத்து மாற்றமல்ல**. இவ்வகை மாற்றத்தைப் புகுத்த, எந்த ஒரு தனி ஆளுக்கோ, குழுவுக்கோ உரிமை இல்லை. உலக நிறுவனங்கள் அனைத்திலும், உறுதியாக நிலைத்துக் குடியாட்சிக் கொள்கை பற்றி நடப்பது மொழியெனும் நிறுவனமே இதில் பொதுமக்கள் ஒப்பு ஏற்கும். 'இயற்கை'யாகத் தோன்றும் மாற்றம் மட்டுமே செல்லுபடியாகும்[2]—செயற்கையாக முற்போக்கு எனும் பெயரில் மொத்த நோக்கற்ற (lucking in perspective) முடிவுகளைப் புகுத்துவது அறிவுடைமையாகாது. பரந்து வரும் அறிவியல் புரட்சியால் சுருங்கி வரும் உலகத்தில் வாழும் இனத்தவர்கள் முன்னெப்போதும் இல்லாதபடி நமது அமைப்புகளையும், இயல்புகளையும் நிலைநாட்டுகின்றனர் தத்தம் மொழி வாயிலாக: **இவ்வமைப்புகளிலும், இயல்புகளிலும் தலையாய தொன்றும் மொழியே!** மிகப்பல அமைப்புகளைச் சந்திக்க நேரிடுகையில், இவற்றையொட்டி நமது அமைப்பில் அடிப்படை மாற்றம் (எ. முதலொலி மாற்றம்) செய்யப் புகுந்தால் அது முடிவற்ற செயல் மட்டுமின்றி, தேவையற்ற செயலுங்கூட. (எ. ஆசிரியர் குறிப்பிட்டுள்ள ஒலிகளைத் தவிர, ஆங்கிலத்தின் சில உயிரொலிகள் common, ambient, போன்றவை-தமிழில் வடிவம் பெறவேண்டாமா? உலகத்தில் பெருஞ் சாய்கால் வாய்ந்த பிரெஞ்சு உருசிய மொழிகளின் j-ஒலிக்கும் (Zh-ழ அன்று!) இடமளிக்க வேண்டாமா தமிழில்! அறுபது கோடிக்கு மேற்பட்ட மக்கள் எழுதும் சீன மொழியின் சிறப்பொலிகளைக் குறிக்கக் கூடாதா தமிழில்? இன்னும் எத்தனையோ!) ஆசிரியர் குறிப்பிட்டுள்ள புது முதலொலிகள் தமிழ் மக்களின் அன்றாட மொழிக்கு முற்றிலும் தேவையற்றவையாய் இருக்க, அவரோ 'இதனால் அன்றாடம் தேவையான எவ்வகை ஒலிகளையும் எழுத முடியும்'என்கிறார்! அன்றாடப் புழக்கத்தில் ஷ, ஜ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ-குறிகளில் சில முழுக்க முழுக்கவும், வேறு சில குறைந்தது 95 விழுக்காடும் (95%) தேவையற்றவை என்பதையும் மெய்ப்பிக்க முடியும்.

முதலொலி : பொருளுணர்ச்சிக்கு இன்றியமையாத ஒலி.

(Ref) ² The speakers of a language constitute a republic, or rather, a democracy, in which authority is conferred, only by general suffrage and for due cause, and is exercised, under constant suppervision & control.—Whitney, 'Language & the Study of Language.'

பிற அமைப்புகளைப் போற்றத் தெரிந்திருப்பதுபோல், நமது சொந்த அமைப்பினையும் போற்றிப் பேணிக் கையாள் நமக்குக் தெரியாவிடில் நாம் உலகத்துக்கு இளைத்தவர்களாக மட்டுமே உருவெடுப்போம். தென்னகம் இதனைச் சிந்திக்குமா? மற்றவர்களைத் கண்டாவது தெளியுமா?

(iv) அறிவியலைப் பொதுவியலாக (**Science as an everyday experience**) ஆக்கினுல்தான் நாடு தழைக்கும்; இதற்குத் தாய் மொழியையே பயிற்று மொழியாகக் கொள்ள வேண்டுமென்பது கல்வியாளரின் துணிபு; இத்தொடர்பில், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள அருமையான கலைச்சொற் பட்டியல் களைப் பார்வையிட்டால்,ஷ, ஜ, ஸ, ஹ க்ஷ, ஸ்ரீ மற்றும் எந்தப் புதுக் குறியீட்டுக்கும் தேவையில்லை என்பதை உணரலாம். அப்படியே சில நிலைகளில் பிற மொழிச் சொல்லை உள்ளபடியே ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தாலும், தமிழொலி முறைக்கேற்ற ஆங்கில, உருசிய. பிரெஞ்சு, நிப்போனிய (**Jepanese**) அல்லது அல்மானிய (**German**) மொழி போன்ற அறிவியல் வளம்பெற்று விளங்கும் எந்த மொழிச் சொல்லையும் தேர்ந்தெடுக்கலாம். ஆங்கிலம் ஒன்றுதான் அனைத்துலக அறிவியல் மொழியென்று நினைப்பது உண்மைக்குப் புறம்பானது.

(v) 'க, உ, ங..... வைக் கைவிட்டதைப் பாராட்டியும் ரோமன் எழுத்தின் தகுதி பற்றி அதை ஏற்பது நலம் என்றும் கூறும் ஆசிரியர் உண்மையாகவே வடஇந்தியாவில் இத்தகு மாற்றங்கள் ஏற்கப்பெறும் என்று நினைக்கிருரா என்ன? வடக்கில் தங்கள் எண்குறிகளையும் சரி எழுத்து முறையையும் சரி, விடாப் பிடியாகப் பிடித்துக் கொள்வதோடு மட்டுமின்றி பிறமொழி-எழுத் தினரிடையே இவற்றைப் பரப்பவும் பெருமுயற்சி கொண்டுள் ளார்கள்! இந்தியா இன்று அரசியல் வழி ஒரு நாடாக இருப்பதால் தென்னகப் பெயர்களில் வழங்கும் வடஇந்திய மொழிகளில் இடம் பெருத, ஒலிகளான ஏ, ஒ, ற ள, ழ போன்றவற்றை வடஇந்திய மொழிகள் ஏற்றுக்கொள்ளும் என்று யாரேனும் கற்பனை கூடச் செய்ய முடியுமா? கருநாடகத்தில் கூடத் தமது எண் குறிகளை மாநில அரசு கைவிடவில்லையே! நாமோ ஏட்டுச்சுரைக்காயைக் கறியாக்க முனைவதே வாழ்வின் பெரும்பயன் என்று கருதுகிரேும்!

(2): (vi) இறுதியாக, மற்ருெரு செய்தியையும் நினைவு கூர்வோம். பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவன'த்திலிருந்து (**'Indian Institute of Science'**) 1962-இல் வெளியான 'இந்திய மொழிகளின் சார்பியல் திறங்களின் சில கூறுகள்' (**'Same**

Aspects of the Relative Efficiencies of Indian Languages') என்ற ஆய்வுக் கட்டுரையின் சில முடிவுகள் பின் வருமாறு :

1. தொலைவரைவுத் தொடர்பானது தமிழ்மொழியில், ஆங்கிலந்திற் போலவே திறமுடையதாகவும் குறிப்பிட்ட பிற மொழிகளைப் பொறுத்தவரை (தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகியன) அவற்றினும் மிகுந்த திறமுடையதாகவும் ஒவ்வொரு மொழிக்கும் உரிய உகந்த எழுத்துக் குறிகளைப் பயன்படுத்திக் கண்டதில் தெரியலானது.

2 இந்திய மொழிகளினின்றும் ஆங்கிலத்திற்குப் பெயர்த்த மொழி பெயர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்ததில், ஒரு செய்தியின் ஒரே சொற்பொருள் அடைவினை எடுத்துணர்த்துதற்கு வேண்டிய செய்தியறிவிப்புத் துணுக்குகளின் எண்ணிக்கையானது. தமிழில், ஆங்கிலத்திற்கும் விடக் குறைவானதாகவும்; பிற இந்திய மொழிகட்கு (தெலுங்கு மலையாளம், இந்தி) விட மிக மிகக் குறைவானதாகவும் உள்ளது; எனவே தமிழே எல்லாவற்றினும் திறம்படைத்ததாகவும் ஆங்கிலத்தினும் மிகுதிறம் படைத்ததாகவும் இருக்கின்றது.

3. உரோமன் வரிவடிவத்தைத் தமிழுக்குப் பயன்படுத்துவதில் உள்ள நன்மை மிகக் குறைவானதாகவே இருக்கக் கூடும்.

---

1) Telegraphic Transmission in Tamil is nearly as efficient as English, and is more efficient than the other languages considered (Telugu, Kannada, Malayalam and Hindi), using the optimium code for each language.

2) The number of bits of information, required in Tamil to convey the same semantic content of a message is lower than that required for English and much lower than other Indian languages (Telugu, Kannada, Malayalam, Hindi); based on translations from the Indian languages into English, therefore, Tamil is the most efficient, and is more efficient than English.

3) The advantage in using Roman script for Tamil may only be slight.

மக்களவை

ம : 235 : பார்ப்பனர் ஒருவர் விடுத்த பாராட்டு மடல்!

(இவ்வெண்ணிட்ட மடல் பக்கம் 32, 33-ஆம் பக்கங்களில் அச்சாகியுள்ளது. இது திருவைகுண்டத்திலிருந்து அண்மையில் நமக்கு வந்தது. அதில் நம் தொண்டு பற்றி எழுதியிருந்தாலும் மடல் முழுவதும் வடசொற்களால் எழுதப் பெற்றுள்ளது. இம்மடல் வேண்டுமென்றே எழுதப் பெற்றதாகலாம். ஆனாலும் ஆரியப் பார்ப்பனர்கள் நம் நடவடிக்கைகளை எவ்வளவு கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இம் மடலே சான்று. அன்பர்கள் இம் மடலைக் கண்ணுற வேண்டும் என்பதற்காக, இதிலுள்ள வடசொற்கள் களையப் பெறாமலும் அவர் கையெழுத்திலும் மடலை வெளியிட்டுள்ளோம். தென்மொழியன்பர்கள் இம் மடலை ஊன்றிப் படித்து, அவர்களின் உணர்வு எத்தகையது என்பதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டுகிறோம். —**ஆசிரியர்.**)

ம. 236 : தென்மொழி அன்பர்களுக்கு வேறொரு துணையிதழ்!

மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு, தலைதாழ்ந்த வணக்கம்.

'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்ற குறிக்கோளோடு நடைபோடும் எம் **தமிழ்ச்சுடருக்குத்** தாங்கள்தாம் வழிகாட்டி. மொழித் தூய்மையைக் காப்பதில் எமக்கிருந்த ஆர்வத்தைத் தூண்டிய பெருமை தங்களையே சாரும். நாவணிகர்கள் மலிந்து — நச்சிதழ்கள் மலிந்து மயக்க மருந்துகளை மக்கள் நடுவே விற்பனை செய்து கொண்டிருக்கும் புல்லுருவிகள் நடுவே நாம் நடைபோடுவது என்பது கயிற்றின்மேல் நடப்பதை ஒக்கும்.

இருப்பினும் **'தென்மொழி'** எனக்கு — ஏன் — தமிழ் கூறு நல்லுலகத்துக்கே ஒரு முன்னோடி. தமிழ் மாந்தன் தன்னுணர்வு பெறும் வரை — தலை நிமிர்ந்து நிற்கும் வரை நமக்கு மன அமைதி கிட்டாது.

சில நாட்களில் நள்ளிரவில் விழிப்புத் தட்டும். எண்ண ஓட்டங்களில் இழுத்துச் செல்லப்படும் மனத்தைக் கேட்போன், 'கரைதேடிச்

(34-ஆம் பக்கம் பார்க்க)

உ
ஸ்ரீராமஜெயம்

ம: 235:
சேலம்.

சித்ரபானு ஆடி மீ 17உ.

ஸ்ரீமான் பெருஞ்சித்திரனார் அவர்களின் திவ்ய சமூகத்திற்கு
அநேக நமஸ்காரங்கள் செய்து எழுதும் லிகிதம். தாங்கள் தேக சுகத்தோடும்
சித்த சஞ்சலமில்லாமலும் சகல சவுபாக்யங்களுடனும் இருப்பீர்கள் என பிரார்த்திக்கிறேன்
இப்பவும் தாங்கள் அநேக கஷ்டங்களுக்கும் சங்கடங்களுக்கும் வாழ்வில் நேரிடும்
நிலைக்கும் இடையேயும், மத்தியிலும் தென்மொழி என்று நானங்களால் சொல்லப்
படுகிற மாதாந்தர தமிழ் பத்திரிகையை நடத்தி வருவது சந்தோஷிக்கத் தக்கது.

சமஸ்கிருத சாஸ்திரங்களையும் உபநிஷத்துக்களையும் நமது நோர்கள் அதிகப்படியாய்
வாசித்ததால் சமஸ்கிருத வார்த்தைகள் தமிழ் பாஷையை ஆக்கிரமிக்கத் தொடங்கியது.
அது மாத்திரமல்லாமல், கோயம்புத்தூர் ஜில்லா, ஈ.ரோடு தாலுக்கா(சமீபத்திய ஈ.வே.ராம
சாமி நாயக்கர் ஜில்லா) ஈ.வே. ராமசாமி நாயக்கரும் இதையெல்லாம் லட்சியம்
செய்யாமல் சமஸ்கிருத வார்த்தைகளைத் தங்களது வாராந்தர- தினசரி பத்திரிகைகளில்
எழுதியும், சம்பாஷணையில் பிரயோகித்தும் அனுஷ்டானத்தில் கொண்டு வந்துவிட்டார்.
அதுமாத்திரமல்லாமல், மற்ற முதலியார், நாயர் போன்ற அந்தஸ்து உடைய ஜாதியினர்
ஆரிய பாஷையை அதாவது ~~[illegible]~~ இங்கிலீஷ் பாஷையில் சம்பாஷிப்பதையும் ஒருவித
கீர்த்தியாக நினைத்துத் தமிழ் பாஷையை மேலும் ஈனமடையச் செய்துவிட்டார்கள்.
அதனால் இப்படியெல்லாம் தாய் பாஷையை ஏதோ மனத்துள்ளே சங்கல்பம் செய்து
கொண்டு விட்டவர்கள் போல் தம் இஷ்டப்படியும் பிறரின் இஷ்டப்படியும் இவ்வாறு
செய்வதைக் கண்டு வருத்தம் வைத்து மிகுந்த வேதனையை உண்டாக்குவது போல
சஞ்சலமும் ப்ரீதி இந்யாதிகளால் இம்சிக்கப்பட்டு தமிழ் பாஷை கஷ்டப்படுவதைக்
காணச் சகியாது மறைமலை அடிகள் (வேதாசலம்) சுத்தமான தமிழ் பாஷையில்
எழுதவும், சம்பாஷிக்கவும் வேண்டியதன் முக்யத்துவத்தை முகாந்திரங்களோடு
பிரச்சாரம் செய்தார். அவரது அபிலாஷையை அவரது சகாக்களும் சிரமேற்
கொண்டு சிரமம் பாராது கருமமே கண்ணாயினராகத் தக்க வழியில் எல்லாம்

அதைப் பிரயோகித்தும், பிறர்க்குப் பிரயோகப்படுத்த வற்புறுத்தியும் பிரயோஜனமான காரியங்களைச் செய்து வரலாயினர். அந்தப் பாரம்பரியத்தில் வந்த நீரும் தற்கால பலத்தில் மற்றவர்களையும் மிஞ்சி சுத்த தமிழ் பாஷையைப் பரப்பப் பேஷாகத் தொண்டு செய்கின்றீர். தமிழ் விரோதிகள் இதைப் பதிக்கப்படுவதுடன் மாத்திரமல்லாமல் இது லாயக்கில்லாத யூஸ்லெஸ் வேலையென்று பரிகாசம் செய்து தூஷணம் செய்து, அந்த விரோதிகள் உம்மை விரோதிகளாகக் கருத்தில் கொண்டு ஜீவித்துத் திரிகிறார்கள். மாதாந்தர வாராந்தர பத்திரிகைகளும் தினசரிகளும் தங்களுடைய சௌகரியத்துக்காகவும், சுயலாபத்துக்காகவும், சுயபட்சத்துக்காகவும் லட்சோபலட்ச வருஷங்களுக்கு முந்தி ஜனித்த தமிழ் பாஷையைக் கொலை செய்து வருகிறார்கள். அப்படி உபயோகித்து அதை இம்சிக்கின்ற ஜென்மங்களை நீர் லட்சியம் செய்யத்தகாது என்பதை நீர் லட்சியமாகக் கொள்ள வேண்டும். தன் ஸ்வோதர இனத்தைத் தானே தூஷிக்கும் ஒரு துர்பாக்யநிலை எந்த தேசத்திலும் யாருடைய ராஜ்யத்திலும் எங்கும் பிறவிடத்திலும் காண முடியாது. இந்த ஜன்மிகளின் அதிகப் பிரசங்கித்தனமான அக்கிரமங்களுக்கு மத்தியில் தாங்கள் ஜனங்களிடம் தனித்தமிழ் பாஷையில் எழுத வேண்டியதன் அவசியத்தை ஜனங்களிடம் பிரசங்கம் செய்வதோடு, பஜாரில் உள்ள கடைகளில் தமிழ் பாஷையில் போர்டுகளை எழுத வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்து தர்ணா, சத்யாக்கிரஹம் இத்யாதிகளை நடத்த வேண்டும். தாங்கள் தொடர்ந்து கஷ்டத்தை லட்சியம் செய்யாமல் போராடித் தமிழ் பாஷையை உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்தப் பிரயாசித்த வேண்டும். அநேக அனுதாபிகளின், தமிழபிமானிகளின் அபிமானங்கள் விளைவு ரூபமே இது. அதன் பலன் சமீபத்திலிருக்கிறது. நீவிர் தீர்க்காயுளுடன் சகல சம்பத்தும் பெற்று அநேக வருஷங்கள் ஜீவித்துத் தமிழ் பாஷையின் க்ஷேமத்திற்காகப் பாடுபட வேண்டும். இதற்குப் பகவான் சௌபாக்யம் அருளவும், ஆசிர்வதிக்கவும் பிரார்த்திக்கிறேன்.

இந்தத் தென்மொழியில் அரசியல் பிரமுகர்களின் அபிப்பிராயத்தை விமர்சித்து எழுதிய தலையங்கம் வெகு ஜோர். லட்சியம் ஜெயிக்கட்டும்.

இப்படிக்கு

— புருஷோத்தம (ஐயர்) — [illegible]

செல்கிறேமே—விரைவில் கிட்டுமா?' என்று. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற நோக்கில் நடைபோடுவோம். குறிக்கோள் நிறைவேறும் நாள் அருகே...அருகே என உள்மனம் உரைக்கும்.

தங்களிடம் ஒரு வேண்டுகோள். மொழி நலனைப்பற்றி மிகவும் கவலுறும் தாங்கள் 'தென்மொழி'யில் மக்களின் அன்றாட வாழ்வியற் சிக்கல்களுக்கும் சிறப்பிடம் கொடுத்துத் தீர்வுகள் தந்தால், தமிழுலகம் பயன் பெறும். வினுவிடைப் பகுதியைத் தொடங்கினுல் மிகவும் நன்று. அடியேனுக்குத் தக்க அறிவுரைகள் நல்க வேண்டுதும். நன்றி. அன்பு,

—**மணிமுத்து**, பொறுப்பாசிரியர், தமிழ்ச்சுடர், பழனி.

ம: 237: உலகத் தமிழ் மாநாடு
கவனிக்க வேண்டியவை

மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

தமிழினமும் தமிழ் மொழியும் அடைந்துள்ள இழிவுகளுக்குக் கணக்கே இல்லை. விளைந்துவிட்ட மானக் கேடுகளை நீக்காத நிலையில் மேலும் மேலும் கேடுகள் விளைந்து கொண்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு உலகத் தமிழ் மாநாடு நடைபெறவுள்ளது! அது நடப்பதற்கு முன், தமிழ் நாட்டில் தமிழரிடையே பெரும்பாலும் தமிழ் வாழுகிறது என்ற நிலையை ஏற்படுத்தல் இன்றியமையாதது. அவ்வாறு செய்த பின்னரே தமிழ் மாநாடு நடத்துகிற உரிமையுந் தகுதியும் நமக்கு ஏற்படும்.

தமிழ் நிலப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் மாணவர்தம் பெயர்களையேனும் தமிழில் எழுதுகிற வழக்கம் இன்னும் ஏற்படவில்லை. அப்படி எழுதப்பட்டிருக்குமானுல் தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் மட்டும் எழுதப்பட்டிருக்கும். உயர்நிலைப் பள்ளி முதல் மிக இழிவாகத் தமிழ்மொழி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் பெயர்களைத் தமிழில் எழுத மறுக்கிற தலைமையாசிரியர்கள் ஒரு கரணியத்தை வலிவாகக் கூறுகின்றனர். தமிழக அரசின் பல்கலைக் கழகங்களும் இடைநிலைத் தேர்வு நிறுவனமும் நடத்துகிற தேர்வுகளுக்குச் செல்லும் மாணவர்களின் பெயர்களை ஆங்கிலத்திலேயே எழுதுமாறு கேட்கப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். அதன் கரணியமாகவே தாங்கள் எல்லா வகுப்புகளிலும் மாணவர்தம் பெயர்களை ஆங்கிலத்திலேயே எழுதச் செய்வதாகவும் அவர்கள் கூறுவது சரியென்றே படலாம். **அவர்கள் இங்ஙனம் கூறுவதற்கு இனி வழியில்லாமல் செய்ய அரசு கடமைப் பட்டுள்ளது.**

எட்டாம்வகுப்புத் தேர்வு வேண்டுகோள் படிவம்முதல் முதுகலைத் தேர்வு வேண்டுகோள் படிவம் வரை அனைத்தையும் தமிழிலேயே அச்சிடல் வேண்டும்.

அதே போன்று, தேர்வு எழுதும் மாணவர் பட்டியல்களைத் தலைமையாசிரியர்கள் தமிழிலேயே எழுதியனுப்புமாறு தமிழக அரசு கட்டளை பிறப்பித்தல் வேண்டும்.

அன்றியும், தேர்வுச் சான்றுகள் அனைத்தையும் தமிழிலேயே அச்சிட்டு வழங்கல் வேண்டும். தேர்வுச் சான்றிதழ்கள், பட்டங்கள் முதலியவற்றின் பெயர்களைத் தமிழாக்க வேண்டும்.

S. S. L. C., Higher Secondary, B. A., Bsc., M. A., M. Phil., Doctor, B. L., B.Ed.. முதலிய எல்லாப் படிப்புகளின் பெயர்களையும் தமிழில் மொழி பெயர்த்து வழங்கல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் செய்வதற்கு ஒரு மறுப்புக் கூறப் பெறலாம். அஃதாவது, 'கணக்கி' (கம்புயூட்டர்) மூலம் மதிப்பெண்கள் வரையப் படுகின்றன, ஆங்கிலத்தில் மட்டுமே அது தன் பணியைச் செய்ய முடியும் என்று! ஒரு கருவியால் நமது தாய்மொழி ஒதுக்கப்படுகிற தெனின், அக்கருவியை ஒதுக்கி நம் தமிழ்மொழியை வாழவைப்பதே நமக்கழகு. அன்றேல், அக்கருவியைத் தமிழிற் பணிபுரியும் வகையில் புதுக்குதல் வேண்டும். இருவகைப் பணிகளும் ஒரு சேரவேனும், இயலலாம்!

தமிழர் பெயர்களைத் தமிழில் எழுதும் வழக்கம் தமிழ் நாட்டுக் கல்விக் கூடங்களில் இல்லை!!

தமிழ் மாணவர்கள் பெறும் படிப்புச் சான்றுகளின் பெயர்கள் தமிழில் இல்லை!!

இந்த இழிநிலையை நீக்கத் தமிழக அரசு முன் வருமா?

அன்புநிறை,

—**க. தமிழ்மல்லன்**, செயலாளர், தனித்தமிழ்க் கழகம், புதுவை-9.

ம: 238: தென்மொழியன்பர் தம் கடமை!

தென்மொழி அன்பர்கட்கு,

தமிழ்ச்சிட்டு, தென்மொழி இதழ்களின் விலையை உயர்த்துமாறு ஆசிரியரைக் கேட்டுக் கொள்ள வேண்டா. ஏனெனில், கூறுதும்: தென்மொழிக்கு அன்பர் நொதுமலர், புறத்தார் என முத்திறத்தினர் உளர். புறத்தாரை நம் முயற்சியால் எக்காலும்

நம்பால் இழுத்தல் அரிது. எனவே அவரை அப்பக்கம் தள்ளுக. அன்பர்கள், விலை உயர்த்தத்தின் வாயிலாகத்தான் உதவவேண்டும் என்பதில்லை. எனவே அவரை இப்பக்கம் நிறுத்துக.

எஞ்சிய நொதுமலரே நம்பக்கம் ஈர்க்கப்பட வேண்டியவர். தென்மொழியின் சுவை கண்ட அன்பரைப் போல, சுவை காணாத நொதுமலர் ஒருவர் அதிக விலை கொடுத்து ஓரிதழை வாங்க முற்பட மாட்டார். விலையைப் பார்த்த உடனேயே நகர்ந்து விடுவார். எனவே நொதுமலரைக் கருதி, விலையை உயர்த்தும்படி வேண்டற்க.

இனி இதழ்களில் வெளியீட்டுச் செலவினைச் சரிக் கட்டுவது யாங்கனமெனில், சொல்லுதும்: தென்மொழி திரு. துரை. மாணிக்கம் அவர்களுக்குச் சொந்தமானது அன்று; தென்மொழி அன்பர்களுக்கு அவர்களுடைய படிநிகராளியராகிய பெருஞ் சித்திரனார்க்குச் சொந்தமானது. எனவே தென்மொழி அன்பர் ஒவ்வொருவரும் மாதந்தோறும் உருபா 20 அல்லது 15 அல்லது 10 அல்லது 5-க்குத் தென்மொழி, தமிழ்ச்சிட்டுப் படிகளை வாங்குக. தமக்குத் தொடர்புடைய மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் படிக்கத் தருக. இலவசமாக வழங்குக. உறுப்பினராக்க முயல்க.

இவ்வாறு உதவும் அன்பர்க்கும், உதவி பெறுவோர்க்கும் உலகுக்கும் ஏற்படும் பயன் அளவிடற் கரியது அதனை விளக்கப் புகின் விஞ்சும். அன்பன்

—ச. **தமிழ்வேலன்**, தமிழாசிரியர், மன்னார்குடி.

தமிழ்த் தொண்டே எம் வாழ்க்கை

ம: 239: மாண்புமிகு ஆசிரியர் அவர்களே, வணக்கம்

நான் நாகர்கோவிலின் அண்மையில் ஆளூரில் பிறந்தவன். பாளையங்கோட்டைத் தூய யோவான் கல்லூரியிற் பயின்று இளங் கலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேறினேன். அன்று மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்விலும் முதல்வனாகத் தேறினேன். கட்டுரை, சொற்பொழிவுப் போட்டிகளில் முதற் பரிசுகள் பெற்றேன். பின்னர், கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பயின்று குமுகாய அறிவுக்கலைகளில் முதல் வகுப்பில் பட்டம் பெற்றேன். அது 1950-இல். அன்று முதல் அக்கலைகளின் அரிய கருத்துகள் தனித்தமிழில் தந்து தமிழ் வளர்க்க அவாவுற்றேன். எனினும், கேரள அரசின் தொழில் துறையில் உயர் அலுவலராக வேலையில் அமர்ந்து விடுதலை பெற்ற எனக்கு இப்பொழுதுதான் அதற்கான ஓய்வு கிடைத்துளது. நான் இவண் நடுவண் அரசின் நாட்டு மருத்துவ ஆய்வுக்கூடத்தில் (Central Institute of Research in Indian Medicines) தொடர்பு கொண்டு, சென்ற 5 ஆண்டுகளாக இயற்கை மருத்துவ ஆய்வில் ஈடுபட்டுள்ளேன். விரைவில் ஊர் திரும்புவேன். அங்குத் தனித்

தமிழ்க் கழகம் நிறுவ விழைகின்றேன், இயற்கை மருத்துவம், குமுகாய அறிவியற் கலைகள் இவைவழி, தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டுபுரிய நாடுகின்றேன். தங்களது அன்பும் வாழ்த்தும் அடைய அவாவுறுகின்றேன்.

—**குமரி. இளம்பொறியன்,** எசு. ஏ. சக்கூர், காரக்குன்றம்.

ம: 240: வடார்க்காடு மாவட்டத் தென்மொழி அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

"தென்மொழி' இயக்க உணர்வினைப் பல்துறை மக்கள் தொகுதிக்கும் பரப்பும் நோக்குடன் வடார்க்காடு மாவட்ட அளவில் "தென்மொழிப் பேரவை", வரும் மேழத் திங்களில் தொடங்க உள்ளதால், வடார்க்காடு மாவட்டத் தென்மொழி அன்பர்களும் இன ஆர்வலர்களும் மேற்காணும் முகவரிக்குத் தங்களின் முகவரியினை அறிவிக்க வேண்டப்படுகின்றார்கள். இதனால் அன்பர்களை ஒருமுகப் படுத்தும் பணி எளிதாக அமையும். இங்ஙனம்,

—**மு. கதிரவன்**, தலைவர், தென்மொழிப் பயிலுநர் அவை,
நெமிலி, வ. ஆ. மா. வ. 631051.

நன்றி

எம் தந்தையார் மறைந்தமை குறித்து அன்பு கனிந்த ஆறுதல் மடல்கள் எழுதி எம்மை அமைதிப்படுத்திய அறிஞர் பெரு மக்களுக்கும், தென்மொழி அன்பர்களுக்கும், என் சார்பாகவும், எம் அன்னையார் சார்பாகவும் எம் உடன் பிறந்தவர்கள் சார்பாகவும் பிற குடும்ப உறுப்பினர்கள் சார்பாகவும் நெஞ்சு நிறைந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெருஞ்சித்திரன்.

கடந்த ஆறு திங்களாக
வெளிவந்து கொண்டிருக்கிறது

தமிழ்ச்சுடர்

(இலக்கியத் திங்களிதழ்)

ஆசிரியர் குழு:

மணிமுத்து, வலதூரார், கெவனமணி, குறிஞ்சி மணாளன், மெய்யப்பன், செல்வராசு, புலவர் சேய்.

விளக்கம் வேண்டுவோர் எழுதிக் கேட்க.

15, திலகர் தெரு, பொன்னகரம், பழனி-624601.

என் இலங்கைச் செலவு

பெருஞ்சித்திரனார்.

மாநாட்டு முதல் நாள் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை விட இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்குக் கூடுதலான கூட்டம் வந்திருந்தது. நிகழ்ச்சி முடிவுற்றதும், என் சொற்பொழிவை அனைவரும் வந்து பாராட்டினர். உண்மையிலேயே முந்தின நாள் சொற்பொழிவை விட, இரண்டாம்நாள் பொழிவு மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. அதற்குக் கூடுதலான கூட்டமும், அறிஞர் குழுமிய அவையுமே கரணியமாக இருந்தன.

நான் எங்குச் சென்றாலும் பேசினாலும் உரையாடிக் கொண்டிருந்தாலும், அவற்றால் மக்களுக்கு விளையும் பயனைப் பற்றிக் கவலைப்படுபவன். பயன் குறைவான பேச்சுகளையும் நிகழ்ச்சிகளையும் வீணானவை என்று கருதுபவன். சொற்பொழிவுக்குப் போகும் இடங்களிலெல்லாம், நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகின்ற மிகப் பலர், நிகழ்ச்சியில் அவரவர் பேச்சுகள் அல்லது கருத்துரைகள் முடிந்த அளவிலேயே, பிறருடைய கருத்துகளைக்கூட கேட்க விரும்பாமல் அல்லது நிகழ்ச்சியின் பிற பகுதிகளில் கலந்து கொள்ள விரும்பாமல், தமக்கு வேறு வேறு நிகழ்ச்சி இருக்கிறதென்றும், விரைந்து ஊருக்குப் போக வேண்டுமென்றும், உடல்நலம் சரியில்லையென்றும், முகாமையான ஒருவரைப் போய்ப் பார்க்க வேண்டுமென்றும், மேடையில் அமர்ந்திருப்பவர்களிடம் கூறிவிட்டு, விடுவிடுவென்று புறப்பட்டுச் சென்று விடுவதைப் பார்த்திருக்கின்றேன்; வருந்தியிருக்கின்றேன். அவர்கள் எதற்குத்தான், என்ன பயனை எதிர்பார்த்துத்தான் சொற்பொழிவாற்ற வருகிறார்களோ என்று மனம் கசந்திருக்கின்றேன். அவ்வாறின்றிப் பொதுத் தொண்டில் ஈடுபடுபவர்களின் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியிலும் அதன் முழுப் பயனை எதிர்பார்க்கின்றவன் நான். ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்கு என நான் போய்விட்டால், போன நேரத்திலிருந்து, நிகழ்ச்சி முடிந்து வண்டிக்கு வருகின்ற நேரம் வரை, அந்நிகழ்ச்சியை அமைத்தவர்கள், அங்குள்ள அன்பர்கள், அறிஞர்கள், கல்லூரிகள் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், ஊர்ப் பொதுத் தொண்டர்கள் என என்னைப் பார்க்க, பார்த்துப் பேச வருகிறவர்களிடமெல்லாம் மிக அன்பாகவும், ஆறுதலாகவும், இணக்கமாகவும், காலம் நேரம் பாராது, விடிய விடியக் கூடப் பேசவும், கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் நான் என்றும் தயங்கியதேயில்லை. வருகின்றவர்களில் பலர் நம் கொள்கைக்கும் கருத்துக்கும் மாறுபட்டவர்கள் இருப்பார்கள். அவர்களிடமெல்லாம் மிகவும் பொறுமையாக அவர்கள் கருத்துகளை மணிக்கணக்காகக் கேட்டதும், என் கருத்துகளை அவர்கள் விளங்கிக் கொள்ளும் வரை மிகவும் தெளிவாகவும் எளிமை

யாகவும் எடுத்துச் சொல்வதும் எனக்கு மிகவும் விருப்பமான நிகழ்ச்சிகளாகும். எவ்வளவோ விளக்கிக் கூறியும் என் கருத்துகளை விரும்பாமல் போனவர்களும் உண்டு; விளக்கத்திற்குப் பின் அவற்றை அன்புடன் ஏற்றுக்கொண்டு என் தொண்டுக்குத் துணைகளாக, தூண்களாகத் தங்களை ஒப்படைத்தவர்களும் உண்டு. எந்தச் சூழ்நிலையிலும் எவரிடத்தும் கருத்துப் பரிமாற்றத்துக்கு அஞ்சியோ, தன்னிலை ஆய்வுக்கு இடங்கொடாமலோ, அன்பர்களின் வேண்டுகோளைப் புறக்கணித்தோ, மேடையிலிருந்தோ, நிகழ்ச்சிக்கு இடையிலோ, நிகழ்ச்சி முடிந்த உடனேயோ நான் விரைந்து ஊர் சென்றவனல்லன். இந்நிலைகளெல்லாம் என்னுடன் நெருங்கிப் பழகும் தென்மொழி உள்ளங்களுக்கு நன்கு விளக்கமானவை.

இவற்றையெல்லாம் எதற்கு இங்கெடுத்துக் கூறுகின்றேன் என்றால், எந்த நிகழ்ச்சியின் முடிவிலும், அந்நிகழ்ச்சியால் நம் இன மக்களுக்கு, அல்லது மக்களின் அறிவுநிலை வளர்ச்சிக்கு ஏற்பட்ட பயன் என்ன, எத்துணையளவு என்றெல்லாம் கணித்துப் பார்த்து, அவற்றின் குறைவு மிகுதிகளால் வருந்தவும் மகிழவும் செய்கின்றவன் நான் என்பதைச் சுட்டவும், அவற்றிற்கேற்ப நிகழ்ச்சிகளின் இறுதி வரையிலும் நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின்னும் ஆங்காங்கு இருந்து, அவற்றின் நிலைகளுக்கு என்னை உள்ளாக்கிக் கொள்பவன் என்பதை உணர்த்தவும் வேண்டி என்க.

எனவே, என் இலங்கைச் செலவின் ஒவ்வோர் அசைவிலும் பெரும்பயனை இயல்பாகவே எதிர்பார்த்திருந்தேன். எதிர்பார்த்திருந்தது போலவே, அன்றைய நிகழ்ச்சியும், அதில் என் சொற்பொழிவும் பெரும்பயன் தருவனவாய் இருந்தன. இனி, அவற்றினும் மேலாக, திரு. பொன்னம்பலம் பேசிய பேச்சாலும் நான் பேசிய பேச்சால் அவர் மகிழ்ந்த நிலையாலும் மிகவும் நிறைவுபெற்றிருந்தேன். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் என்னிடம் வந்து தம் மகிழ்வையும் நிறைவையும் தெரிவித்தனர். சிலர், கூட்டத்திற்கு வராத தம் நண்பர்கள் சிலர் பற்றியும் பொதுமக்கள் பற்றியும் குறைபட்டுக் கொண்டனர். சிலர், நாளைய நிகழ்ச்சிக்கு இன்னும் நிறையப் பேர் வருவார்கள் என்று நம்பிக்கை ஊட்டி என்னை ஊக்கப் படுத்தினர்.

அனைவரும் ஒருவாறு கலைந்து சென்ற பின், திரு. கா. பொ. இரத்தினமும அவர் நண்பர்களுடனும் இரவு 10-30 மணியளவில் பொன்கொடு தீவு சென்று இரத்தினம் வீட்டில் உணவு எடுத்துக் கொண்டேன். உணவு முடிந்தவுடன், திரு. இரத்தினம் அவர்கள் என்னிடம் வந்து, அங்கிருந்து 46 கல் தொலைவில் **கரணவாய்** என்னும் ஊர் இருப்பதாகவும், அங்குள்ள இளைஞர் முன்னேற்றக்

கழகத்தினரின் ஆதரவின் கீழ் 20-ஆவது திருவள்ளுவர் நினைவு விழா மாநாடு நடைபெறுவதாகவும், அங்குள்ள இளைஞர்கள் அம் மாநாட்டில் நான் வந்து பேச வேண்டும் என்று விரும்புவதாகவும், அதற்காக மக்களைக் காக்க வைத்திருப்பதாகவும், மாநாட்டுக் குழுவினர் என்னை அழைத்து வர இயங்கி அனுப்பியிருப்பதாகவும் கூறி, என்னைப் போய் அதில் கலந்து கொண்டு வரச் சொல்லியும் கேட்டுக் கொண்டார். 'இந்த நள்ளிரவில் நாற்பத்தாறு கல் போய் வருவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் மக்கள் காத்திருப்பார்களா?' என்று பண்டிதரிடம் நான் கேட்டேன். அதற்கு, அங்கிருந்து வந்த இருவர், 'கூட்டம் மிக ஆவலுடன் கலையாமல் காத்திருக்கிறது' என்று கூறினர். மணியைப் பார்த்தேன். சரியாகப் பத்து—நாற்பத்தைந்து ஆகியிருந்தது. 12 மணிக்கெல்லாம் போய் விடலாம் என்றார்கள். எனவே, சிறிதும் தயங்காமல் வண்டியில் போய் அமர்ந்தேன். என்னுடன் திரு. இராமலிங்கமும் நிமலனும் புறப்பட்டனர். உண்ட பின் வெற்றிலை போடாமல், இருந்த நான் வண்டியில் அமர்ந்த பின், வெற்றிலை பாக்குப் போடத் தொடங்கினேன். வண்டி பறந்து கரணவாய் சென்றது.

(தொடரும்)

"எங்கே மனம் அச்சமின்றியுளது!"

தமிழில்: **சி. நா. செந்தமிழ்ச்செல்வன்**

எங்கே உள்ளம் அச்சமின்றி உளது!
எங்கே தலை நிமிர்ந்து நிற்கிறது!
எங்கே அறிவு விடுதலை பெற்றுளது!
குறுகிய சுற்றுச் சுவர்கள் இன்றி
எங்கே உலகு சிதைவுறு திருக்கிறது!
எங்கே சொற்கள் ஆழ்ந்த உண்மையினின்று
வெளிப்படுகிறது!
எங்கே அயராது போராட்டம் மாட்சிமையை
நோக்கிக் கைகளை நீட்டுகிறது!
எங்கே தூய பகுத்தறிவு ஓடை
தன் வழியைப் பாலையில் இழவாதிருக்கிறது!
விரிந்த எண்ணத்துள்ளும் செயலினுள்ளும்
எங்கே உன்னால் உள்ளம்முன்னேக்கி ஒப்பப்பெறுகின்றது!
அந்தத் துறக்க விடுதலையில்
எந்தையே
என் நாட்டை விழிப்புற செய்வாயாக!

குறிப்பு: (இஃது தாகூரின் "Where the Mind is without Fear" என்ற உரைப்பாவின் தமிழாக்கம்.)

0.691: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். தங்களுடைய அருமைத் தந்தையார் அவர்கள் காலமான செய்தியை அறிய மிக வருந்துகிறேன். 'கனிச்சாறு' வெளியீட்டின்போது வந்திருந்து, தமது இனிய மகனாரின் அரிய பொதுத் தொண்டினைப் பற்றிய புகழ்மொழிகளை நுகர்ந்ததே போதுமென எண்ணி இவ்வளவு விரைவில் இயற்கை எய்தினரோ? விழாவிற்கு வந்த ஒரு மாதத்திற்குள் எதிர்பாரா வண்ணம் வாழ்வைத் துறந்த பெரியவரின் நிலையை எப்படிச் சொல்வது? எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—கு. வே. கி. ஆசான், கல்வியகம், கோவை-2.

0:692: அறிவறிந்த மக்கட் பேற்றினைப் பெற்ற தந்தையார் அவர்களைக் 'கனிச்சாறு' வெளியீட்டு விழா நிகழ்ச்சியின்போது காலை முதல் மாலை வரை கண்டும் உரையாடியும் களித்தேன். மறுநாள் தங்கள் இல்லம் வந்த காலை அவரோடு அளவளாவி மகிழ்ந்தோம். இயற்கை இத்துணைக் குறுகியகால எல்லையில் அவரை நம்மிடமிருந்து பிரித்து விடுமென அப்போது கற்பனைகூடச் செய்யவில்லையே! அம்மாவை எண்ணி என்னகம் நைகிறது. அன்பின் ஊற்றாகவும் ஆண்மையின் வரையாகவும் அவர் திகழ்ந்தார். அவ்விழா நிகழ்ச்சியில் தம் மகனைச் சான்றோன் என அறிஞர் போற்றக் கண்டார். அமைதியும் உறுதியும் அறிவு நலனும் தமிழுணர்வும் இனக்காப்பெழுச்சியும் சான்ற அருமைத் தந்தையார் மறைவு பேரிழப்பே. எங்ஙனம் இவ்விழப்பை ஈடுசெய்ய வியலும்? காலமருந்துதான் இவ்வாற்றாமையை மாற்ற வேண்டும். தங்கட்கும் இல்லத்தினர்க்கும் என் கழிவிரங்கலை உரித்தாக்குகிறேன் .அன்பன்;

—தி. நா. அறிவுஒளி, திருக்கழுக்குன்றம்.

0:693: ஏனோ அவலம் பல நிலைகளிலும் நம்மைத் தாக்குகின்றது...பல நல்லற் காலைகளில் தங்களுடனிருந்த நான், அல்லற் காலை இல்லாது போய்விட்டேனே என்று வருந்துகின்றேன்...சில நாள்கள்தாம் தந்தையுடன் பழகினேனே. மீண்டும் அவரிடம் பல வரலாற்றுச் செய்திகள் பற்றிக் கேட்டறிய எண்ணியிருந்தேனே! என் ஆசையெல்லாம் மண்ணாகிப் போனதே! அவர் வாழ்க்கையில் உண்மையாகவே உண்மையாக வாழ்ந்த நிலைகள் என்னை மகிழ்வித்தன. சென்னையிலிருந்த நாள்களில் பல செய்திகளை அவர் வாயிலாயறிந்தேன். பழந்தமிழ்ப் பண்புகள் அழிந்து போகாமல் காக்கப்பட்டு வருவது பற்றி மகிழ்ந்தேன். அவருக்கு உண்மையின் மீதிருந்த பற்றுத்தான் தங்களுக்குப் பேருக்கமாகச் சிறப்புற்றிருக்கிறது என்று எண்ணி வியந்தேன். குடும்ப நிலைகளை யெல்லாம் அமைவு செய்ய எண்ணியிருந்தோமே! ஏன் இயற்கை நம் வாழ்வில் திடீரென்று இத்தனைச் சூறாவளிகளை விளைவிக்க வேண்டும். இவை நன்மையில் முடியுமா? மீண்டும் நம்மைச் சிதைத்துத் தகர்க்குமா? புரியாத நிலையில் குழம்பியிருக்கின்றேன்...விரைவில் என் அன்பைக் காண்பேன். ஆறுதலடைவேன். வேறு யார் என்னைத் தேற்ற வல்லார்?

—ந. முத்துக்குமரன், பல்லடம்.

0:694: சீர்சால் தந்தையார் அவர்களை இழந்தோம். நேரில் காணாமல் தவறிய பிழையைச் செய்தோமே என்று வருந்தினோம். தாங்களும் நிலமீட்பர் சிலரும் சிறைப்பட்டபோது தங்களைக் காண அங்குத் தங்களிடம் வந்திருந்து மறவுரை முழங்கிய பாங்கைச்

செவியுற்றோம். பெருமிதவுணர்வு பதிந்ததன் விளைவால் அவ்வரிய சான்றோரைக் காணுமல் போன வருத்தம் நெஞ்சில் தோய்ந்தது. தங்களின் வழி அவரைக் காண இயலும் ஆயினும் மூலவித்தின் உருவத்தைக் காணுத ஏக்கம் ஏனோ தைக்கிறது. தமிழுயிர்ப்பாகத் தங்களைப் பெற்ற தந்தை என்ற அவ்வுயிர் எங்கள் புகழ்ப் பாராட்டுரையில் மகிழ்வதோடு, அவரின் பெயரன்களாக பெயர்த்திகளாக (தங்கள் மக்களோடு) நாங்களும் அவர் விளைத்த உணர்வுகளில் வளர்வோம் என்னும் நல்லுளப் பாங்கை வெளிக்காட்டிக் கொள்கிறோம். தமிழுக்குத் தொண்டு செய்வோர் தந்தைகளும் சாவதில்லை!

அன்புடன், **—மு. அறவாழி, தமிழரசி,** உலகமதி இல்லம், நெய்வேலி-3.

0:695: தந்தையார் அவர்களை நான் ஓரிரு முறைகளே கண்டு பேசியிருந்த போதிலும் எளிய இனிய ஒருவராக அவர் என் நினைவில் நின்றிருந்தார். அவரை இழந்து வருந்தும் தங்கள் குடும்பத்தினர் அனைவர்க்கும் என் ஆழ்ந்த வருத்தத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன் சிறப்பாகத் தம் அரிய கணவரை இழந்து வருத்தத்தில் ஆழ்ந்திருக்கும் தங்கள் அன்னையர்க்கு என் உளம் நெகிழ்ந்த ஆறுதல் மொழிகளையும் உரியனவாக்குகின்றேன்.

அன்புடன், **—ம. இலெ. தங்கப்பா,** அவ்வை நகர், புதுவை-8.

0:696: செய்தியறிந்து பெருந்துன்பமுற்றேன். செய்தியை நான் நம்ப வேண்டியதாயிற்று கரணியம் மடல் தங்கள் கைப்பட எழுதியிருந்தமையே! தந்தையாரை 11-11-79 அன்று நடுவண் நூலக அரங்கில் 'கனிச்சாறு' வெளியீட்டின்போது பார்த்தேன். என்னைக் கண்ட அவர் மகிழ்ச்சி மிகக் கொண்டு அன்போடு தழுவிக் கொண்டார். குடும்ப நலம், பிற செய்திகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். மறுநாள் வீட்டிற்கு வருவதாகக் கூறினுர். அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது அவர் எவ்வகை நலக் குறைவோடும் இருந்ததாகத் தெரியவில்லை. உடல் நலத்தோடு அண்மையில் அவரைப் பார்த்த எனக்குத் தந்தையாரின் இறப்புச் செய்தி பெருவியப்பாக இருந்தது.. அப்பாவின் பிரிவால் துன்புற்றுழலும் அம்மாவுக்குத் தாங்கள்தாம் ஆறுதல் கூறல் வேண்டும், அன்புள்ள,

—செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2.

0:697: ..தந்தையாரை நான் நம் கனிச்சாறு நூல் வெளியீட்டு விழாவன்றே பார்த்தேன். தங்களை இத்தமிழுலகுக்கு ஈன்று தந்த அவ்வேந்தலைக் கண்டு நெஞ்சம் கனிந்தேன் அகவை அளவிலும் தோற்ற அளவிலும் தங்கட்கு அத்திருமகனுர் அண்ணுர் நிலையிலேயே இருப்பதாக எனக்குப் பட்டது. தமிழுலகம் எதிர்காலத்தில் தங்களைப் பெருமைப் படுத்தும் அந்நாளிலும் தந்தையார் இருந்து கண்டு நெஞ்சு களிகொள்வார் என்றே நினைத்திருந்தேன். அன்னுரின் திடீர் மறைவு எனக்குப் பெரு வருத்தத்தை விளைக்

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)